
சுவடி : 45
ஏடு : 08
செப்டம்பர்
2021
*
நிறுவுனர்
**வே.ஆனைமுத்து**
ஆசிரியர்
**வாலாசா வல்லவன்**
*
ஆசிரியர் குழு
**க. முகிலன்**
**இரா.பச்சமலை**
**சா. குப்பன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**
முனைவர் **முத்தமிழ்**
*
**அனைத்துத் தொடர்புகளுக்கும்**
**'சிந்தனையாளன்'**
**பெரியார்-நாகம்மை அறக்கட்டளை வளாகம்**
மனை எண்.277/2
சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை,
பெரியார்-நாகம்மை நூலகம்
அம்பத்தூர், சென்னை - 600 050.
தொடர்புக்கு :
**86681 09047**
**95975 26990**
மின்னஞ்சல் :
sinthanaiyalantamilmonthly@gmail.com
*
இதழ் வடிவமைப்பு :
**சன் நகலகம்,** சென்னை-5.
9840015179
*
இணையத்தில் படிக்க
**www.keetru.com**
*

*ஆசிரியவுரை*

# நமது அருமைத் தலைவர் மறைந்தாரே!

**6-4-2021** முற்பகல் 11 மணி அளவில் புதுச்சேரியில் ஆனைமுத்து அய்யா அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையில் இருந்து முனைவர் முத்தமிழ்ச் செல்வன் அழுதுக்கொண்டே அய்யா மறைந்து விட்டார் என்றத் துயரச் செய்தியை என்னிடம் கூறினார். எதிர்பாராத இந்தத் துயரச் செய்தியால் மீளாத் துயரில் மூழ்கியிருந்தேன். 5 மணித்துளிகள் கழித்து என்னிடம் ஆனை. பன்னீர் செல்வம் அவர்களும் இச்செய்தியை கூறினார் அலைபேசியிலேயே அவரிடம் கதறி அழுதேன்.



இச்செய்தி மா.பெ.பொ.க.வின் தோழர்கள் அனைவருக்கும் ஊடகங்களுக்கும் உடனடியாக தெரிவிக்கப்பட்டது. அன்று தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நடந்து கொண்டிருந்த நாள். புதுவையிலிருந்து அன்று மாலையே உடல் தாம்பரம் இரும்புலியூர் இல்லத்திற்கு கொண்டு வரப்பட்டது. தோழர்கள் சிலர் அன்று மாலையே அங்கு வந்து சேர்ந்தனர்.

தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் டி.ஆர்.பாலு, நா.ம.உ., எஸ்.ஆர். ராஜா, ச.ம.உ. ஆகியோருடன் நேரில் வந்து அன்று இரவு அஞ்சலி செலுத்தினார்.

மா.பெ.பொ.க தோழர்களும் தோழமைக் கட்சியினரும் 7-4-21 காலை முதலே வந்து தங்கள் இறுதி வணக்கத்தைச் செலுத்தினர். அன்றைய நாள் முழுவதும் ஏராளமான பொதுமக்களும், உறவினர்களும் நேரில் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினர். அவருடைய குடும்பத்தினரும், தோழர்களும் மீளாத்துயரில் ஆழ்ந்திருந்தனர்.

அய்யா அவர்களின் விருப்பப்படி அன்று மாலை 5.30 மணி அளவில் போரூர் இராமச்சந்திரா மருத்துவமனைக்கு உடல் கொடையாக அளிக்கப்பட்டது.

மறைந்த நம் தலைவர் அய்யா அவர்கள் பெரம்பலூர் மாவட்டம் முருக்கன்குடியில் வேம்பாயி - பூவாயி இணையருக்கு மூத்த மகனாக 21-06-1925 அன்று பிறந்தார். மாணவப் பருவத்திலேயே கணபதி ஆசிரியர் தொடர்பால் பெரியாரைப் பற்றி அறிந்து கொண்டார்.

பரமத்தி வேலூர் கந்தசாமி கண்டர் உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் போது, தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார் தொடர்பால் தனித்தமிழையும் பெரியாரியக் கொள்கைகளிலும் தெளிவு பெற்றார். அங்கு 11-10-1944இல் பெரியாரின் சொற்பொழிவை நேரில் கேட்டார்.

1946 முதல் 1949 வரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும் காலத்தில், அந்நூலகத்தில் இருந்த தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களையும், ஆங்கில நூல்களையும் கற்று தம் அறிவுத் திறனை மேம்படுத்திக் கொண்டார்.

பெரியார் அவர்கள் சென்னையில் 14, 15-1-1949-இல் நடத்திய திருக்குறள் மாநாட்டின் விளைவாக திருக்குறளார் வீ. முனுசாமி அவர்களை ஆசிரியராக அமர்த்தி, கணபதி ஆசிரியரும் இவரும் சேர்ந்து 14-7-1950-இல் "குறள்மலர் கிழமை" இதழைத் தொடங்கினார். 25 கிழமைகளில், அவ்விதழில் 50க்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தீட்டினார். திருக்குறளாரின் பேராசையால் கணபதி ஆசிரியரும் ஆனைமுத்து அய்யாவும் குறள்மலரிலிருந்து வெளியேறினர்.

1952-இல் நடைபெற்ற தேர்தலில் உழைப்பாளர் கட்சிக்காக தீவிரத் தேர்தல் பணியாற்றினார். அக்கட்சியினர் 19 பேர் சட்டமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1952-இல் அரகண்ட நல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பணியில் சேர்ந்தார்.

விக்கிரவாண்டித் தொகுதியில் உழைப்பாளர் கட்சி வேட்பாளராக வெற்றி பெற்று, தி.மு.க.வில் சேர்ந்த ஆ. கோவிந்தசாமி அவர்களின் அண்ணன் ஆ. சுப்பிரமணியன் - தையல் நாயகியின் மகள் சுசிலா அம்மையாரை 22-8-1954 அன்று தமிழ் மறவர் வை. பொன்னம்பலானர் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் செய்து கொண்டார்.

1956-இல் அரசுப்பணியைத் துறந்து மீண்டும் திருச்சியில் குடியேறினார். 11-1-1957இல் தன்னுடைய சொந்த முயற்சியில் "குறள் முரசு" ஏட்டைத் தொடங்கி னார். அரசியல் விழிப்புணர்வுக் கட்டுரைகளை அவ்விதழில் தீட்டினார். தன்னுடைய துணைவி சுசீலா அம்மையாருக்குத் தாய் வீட்டினர் அணிவித்த பத்து சவரன் தங்க நகைகளை, அய்ந்து மாதத்தில் விற்றுதான் இந்த இதழை நடத்தினார்.

அதே ஆண்டில் பெரியாரின் வேண்டுகோளை ஏற்று, அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் போராட் டத்தில் ஈடுபடுவதற்காக, 19 வயது மனைவியை 2 வயது மூத்த மகள் தமிழ்ச்செல்வியையும் 7 மாதக் குழந்தை பன்னீர்செல்வத்தையும் தன் சொந்த ஊரான முருக்கன்குடிக்கு அனுப்பி விட்டார்.

26.11.1957-இல் பெரம்பலூரில் அரசியல் சட்டத்தின் நகலை எரித்து, 18 மாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். திருச்சி, வேலூர் சிறையில் புத்தகம் கட்டடம் கட்டும் பணியில் உதவி யாளராக பணிபுரிந்ததால், நல்ல நூல்கள் பல வற்றைப் படித்து மேலும் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டார்.

1960 முதல் திருச்சியில் குடியேறி, திராவிடர் கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். 1963-இல் வருவாய்க்காக, தமிழ்நாடு தனிப்பயிற்சிக் கல்லூரி யை திருச்சியில் தொடங்கினார். 1975 வரை அது இயங்கியது.

பொறியாளர் கு. ம. சுப்பிரமணியம், நோபுள் கோவிந்தராசலு போன்றோர் துணையுடன் 7.3.1970-இல் திருச்சியில் 'சிந்தனையாளர் கழகத்தை'த் தொடங்கினார். பெரியார் அவர்கள் கலந்து கொண்டு சிந்தனையாளர் கழகத்தை தொடங்கி வைத்தார்.

1971 முதல் 1974 வரைக் கடுமையாக உழைத்து, அரும்பாடுபட்டு, பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் என்ற மூன்று தொகுதிகளை தொகுத்து அளித்தார். இன்றுவரை அத்தொகுப்புகள்தான் பெரியாரைப் பற்றி அறிந்துகொள்ள ஆவணமாகத் திகழ்கிறது.

1.7.1974-இல் திருச்சியில் அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் அந்த தொகுப்பு நூலை வெளி யிட்டார்.

17-8-1973-இல் திருச்சியில் பாவேந்தர் அச்சகத் தைத் தொடங்கினார்.

17-8-1974 முதல் திருச்சியிலிருந்து சிந்தனை யாளன் கிழமை ஏட்டைத் தம் சொந்தப் பொறுப்பில் வெளியிட்டார்.

சொந்த அச்சகம் இருந்தும் அவர் மூத்த மகள் தமிழ்ச்செல்வி அவர்களே அச்சு இயந்திரத்தை இயக்கியும். ஓராண்டிற்குள் அவ்வேடு 8000 ரூபாய் இழப்பை ஏற்படுத்தியது. இருந்த போதிலும் மனம்தளராமல் அவ்விதழைத் தொடர்ந்து வெளி யிட்டுவந்தார்.

பெரியாரின் முழுமையான வாழ்க்கை வரலாற்றை விரிவான அளவில் எழுதப்போவதாக 11-5-1975 சிந்தனையாளன் ஏட்டில் அறிவிப்பு வெளியிட்டார். பெரியார் மறைவுக்குப்பின் திராவிடர் கழகத்தின் தலைமையின் தவறான போக்குகளை விமர்சித்து,

தி.க. மத்திய குழு உறுப்பினர்களுக்கு 13-11-1975-இல் அச்சிட்ட அறிக்கையை அனுப்பியதற்காக, 16-11-1975 இல் நடைபெற்ற தி.க. மத்திய குழுவில், தி.க. மத்திய குழுவில் இருந்தும், தி.க. விலிருந்தும் நீக்கப் பட்டார்.

உற்றத் தோழர்களின் துணையுடன் 8.8.1976-இல் சீர்காழியில் மா. முத்துச்சாமி அவர்களின் இல்லத்தில் 'பெரியார் சமஉரிமைக் கழகம்' என்ற அமைப்பைத் தொடங்கினார். பின்பு 1988-இல் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி யாகப் பெயர் மாற்றம் பெற்றது.

இயக்கம், ஏடு நடத்துவதை தம் உயிர் மூச்சாகக் கொண்டு செயல்பட்டு வந்தார். பெரியாரின் கொள் கைகளில் ஒன்றான வகுப்புரிமையை ஒன்றிய அரசில் வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கில் 1978 முதல் தில்லியிலும் வட மாநிலங்களிலும் பல போராட்டங்களை நடத்தியும் குடிஅரசுத் தலைவர் நீலம் சஞ்சீவ ரெட்டி, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, அன்றைய பிரதமர்கள் மொரார்ஜி தேசாய், சரண்சிங் அன்றைய உள்துறை அமைச்சர் கியானி ஜெயில் சிங் ஆகியோரைச் சந்தித்தார். இவர் இராம் அவதேஷ்சிங் மற்றும் சில தோழர்களுடன் இணைந்து மேற்கொண்ட போராட்ட முயற்சியின் விளைவாகவே இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக்குழு பி.பி. மண்டல் தலைமையில் அமைந்தது. அக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் வைத்ததில் இவருடைய பங்களிப்பு மிகவும் முதன் மையானது.

1978-இல் இராம் அவதேஷ்சிங் உதவியுடன் பீகாரில் 32 மாவட்டங்களில் 32 நாள்கள் நடத்தப் பெற்ற பெரியார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளும், 23-3-1979-இல் லோகியா பிறந்தநாளில் தில்லியில் நடைபெற்ற மிகப்பெரிய அளவிலான, சுமார் 30,000 பேர் கலந்துகொண்ட பெரியார் நூற்றாண்டு விழா பேரணி - மாநாடு ஆகியவைகளும் வட மாநிலங்களில் பெரியாரின் கொள்கைகள் பரவக் காரணமாக அமைந்தன.

பெரியாரின் சுதந்தரத் தமிழ்நாடு என்பதில் இருந்து சற்று வேறுபட்டு உண்மையான கூட்டாட்சி என்ற திட்டத்தை வகுத்து அதற்கான கூட்டமைப்பை உருவாக்க அரும்பாடுபட்டார்.

மார்க்சியத்தையும் பெரியாரியத்தையும் இணைத்ததில் தோழர் ஆனைமுத்து அவர்களுக்குப் பெரும் பங்குண்டு. மார்க்சியப் பெரியாரியம் என்றால் என்ன என்பதை விளக்கி பல கட்டுரைகளை எழுதியுள்ளார். அம்பேத்கரியத்தையும் உடன் இணைத்துள்ளார். 1978-இல் சென்னையில் நடை பெற்ற வகுப்புரிமை மாநாட்டில் வடமாநிலத் தலை வர்கள் பலரையும் அழைத்துப் பங்கேற்கச் செய்தார். 1979 சேலம் மாநாடு 1984 சென்னை மயிலாப்பூர் மாநாடு என்று தொடர்ச்சியாக வடமாநிலத் தலைவர்களை அழைத்து மாநாடுகளை நடத்தினார்.

9.10.1982 வரை சிந்தனையாளன் கிழமை ஏடு திருச்சியிலிருந்து அவருடைய சொந்தப் பொறுப்பில் வெளியிட்டுவந்தார்.

பெரியார் அச்சிடுவோர் வெளியீடுவோர் குழுமம் ஒன்றை சென்னையில் தொடங்கி, அதன் வழியாக சிந்தனையாளன் ஏட்டை 1983 முதல் சென்னையிலிருந்து வெளிவர ஏற்பாடு செய்தார். குழுமத்திற்கு இழப்பு ஏற்படவே, 1987 முதல் சிந்தனையாளன் இதழை வெளியிடும் பொறுப்பை பெரியார் சமஉரிமைக் கழகம் ஏற்றுக் கொண்டு, இன்று வரை அது மா.பெ.பொ.க. இயக்க ஏடாக வெளிவருகிறது.

எஸ்.ஏ.டேவிட் அவர்களின் உதவியுடன் 1994 அக்டோபர் முதல் 2012 திசம்பர் வரை 18 ஆண்டு கள் பெரியார் ஊழி (PERIYAR ERA) என்கிற ஆங்கில ஏட்டை நடத்தினார். ஈழத்தமிழர்களின் உரிமைப் போரினை உலகறியச் செய்தது அந்த ஏடு. பெரி யாரின் கொள்கைகளை வடமாநிலத்தவர்கள் அறிந்து கொள்ளவும் அவ்வேடு பயன்பட்டது. தோழர் ஆனைமுத்து அவர்கள் பலமணிநேரம் ஆங்கிலத்தில் பேசவும், எழுதவும் திறமை பெற்றிருந்தார்.

மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய கொள்கை களை இளைஞர்களுக்கு விளக்கம் அளிக்க ஏராள மான பயிற்சி வகுப்புகளை நடத்தினார்.

இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதற்காக 1993-இல் சென்னை அம்பத்தூரில் பெரியார் ஈ.வெ.ராமசாமி-நாகம்மை கல்வி ஆராய்ச்சி அறக்கட்டளையை நிறுவினார்.

1989 செப்டம்பர் 17-இல் வேலூரிலும் 1991 அக்டோபர் 19-இல் புதுதில்லியிலும் 1993, 1995 ஆகிய நான்கு மலர்கள் 'பெரியார் பிறந்தநாள்' சிந்தனையாளன் சிறப்பு மலராகவும், 1997முதல்

‘சிந்தனையாளன் பொங்கல்’ மலராகவும் வெளியிட்டு பல மாவட்டங்களில் இதற்கான வெளியீட்டு விழாக்களையும் சுயமரியாதை சமதர்ம மாநாடு களையும், தமிழ்வழிக் கல்வி மாநாடுகளையும் உண்மையான கூட்டாட்சி மாநாடுகளையும் ஆண்டுதோறும் நடத்திவந்தார்.

உடல் நலக்குறைவு காரணமாக சிந்தனை யாளன் கடைசி சில இதழ்களும் சிந்தனையாளன் பொங்கல் மலர் 2021 அவருடைய மேற்பார்வை இல்லாமல் வெளிவந்தன. தான் இல்லை என்றாலும் சிந்தனையாளன் இதழும், சிந்தனையாளன் பொங்கல் மலரும் வெளிவரும் என்ற நம்பிக்கை யை அவருக்கு ஏற்படுத்தியது, 2021 பொங்கல் மலர் வெளியீட்டு விழாவே ஆகும். அதை அய்யா அவர்களே மனம் திறந்து அம்மாநாட்டில் கூறினார்.

நம்மை எல்லாம் துன்பக்கடலில் ஆழ்த்திவிட்டு, நம்மை விட்டு மறைந்துவிட்ட அய்யா அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடன், மார்க்சியப் பெரி யாரியப் பொதுவுடைமைக் கட்சியைத் தொடர்ந்து நடத்துவதும், சிந்தனையாளன் இதழை தொடர்ந்து கொண்டுவருவதும். ஆண்டுதோறும் பொங்கல் மலரைச் சிறப்பாக வெளியிடுவதும் ஆகும்.

சிந்தனையாளன் ஏப்ரல் இதழ் அச்சுக்குக் கொடுக்க தயார் நிலையில் இருந்தது. திடுமென அய்யா அவர்கள் 6-4-2021 அன்று மறைந்துவிடவே அவ்விதழ் அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டது.

சிந்தனையாளன் இதழுக்கு என்னை ஆசிரியர் பொறுப்பேற்றுக்கொள்ளும்படி பணித்த மா.பெ.பொ.க. தலைமைக் குழுத் தோழர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனைமுத்து அய்யாவை இழந்து துயரத்தில் ஆழ்ந்துள்ள மா.பெ.பொ.க. தோழர்களும், ஆதரவாளர்களும் சிந்தனையாளன் இதழைத் தொடர்ந்து கொண்டுவருவதற்கும், மா.பெ.பொ.க.யை வளர்த்தெடுப்பதற்கும் தோழர் ஆனைமுத்து அவர்கள் வழிகாட்டியபடி தேவையானப் பணிகளை மேற்கொள்ளுவோம்.

**தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் புகழ் ஓங்குக**

**- வாலாசா வல்லவன்**
ஆசிரியர், சிந்தனையாளன்

## தோழர் சீனி. பழனி படத்திறப்பு- நினைவேந்தல் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதியளிப்பு



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் வாணியம்பாடி நகரச் செயலாளராக இருந்த தோழர் சீனி. பழனி உடல்நலக்குறை வால், 01.02.2021 அன்று நம்மை விட்டுப் பிரிந்தார். அவரது உடல் எந்த சடங்குமின்றி வேலூர் கிருத்துவ மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு உடல் கொடை அளிக்கப்பட்டது.

சீனி. பழனியின் படத்திறப்பு - நினைவேந்தல் 14.03.2021 அன்று, அவரின் இல்லத்தில், மா.பெ.பொ.க. திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா.மதனகவி தலைமையில் ஊர் நிர்வாகிகள் முன்னிலையில் நடந்தது. சீனி.பழனியின் உருவப்படத்தை மா.பெ.பொ.க தலைமைக் குழு உறுப்பினர் சா.குப்பன் திறந்து வைத்தார். குடும்பப் பாதுகாப்பு நிதியாக ரூ.1,30,000/- அய் மாபெபொ.க. வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி.சங்கர், பழனியின் துணைவியாரிடம் அளித்தார்.

மா.பெ.பொ.க. துணைப் பொதுச்செயலாளர் துரை சித்தார்த்தன், தலைமைக்குழு உறுப்பினர் முனைவர் முத்தமிழ், புதுவை மாநிலச் செயலாளர் இரா.திருநாவுக்கரசு மற்றும் ஒன்றியச் செயலாளர் மு.திருப்பதி, புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற வாணியம்பாடி செயலாளர் புலவர் அ.சகாதேவன், “பெரியார் தொண்டர் கேசவன், மக்கள் பாதை சண்முகம், தமிழக விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் இரா.முல்லை புரட்சிகர இளைஞர் முன்னணி மு.பிரதாபன், விடுதலை சிறுத்தைகள் கட்சி ந.வேலு மற்றும் சையது இலியாகத், தென்றல் தமிழரசன், ஆகியோர் உரையாற்றினர். சீனி.ப. தமிழ்க்குடிமகன் நன்றி கூற நிகழ்வு நிறைவுற்றது.

சீனி. பழனியின் குடும்ப நிதிக்குப் பங்களித்த அனைத்துத் தோழர்களுக்கும் நன்றி.

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
## MARXIST PERIYARIST COMMUNIST PARTY

எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai - 600 050.
: **94448 04980, 9575 26990**


பெறுநர் 24.08.2021

**மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்**
தலைமை செயலகம், சென்னை - 600 009.

பெரியாரியல் பேரறிஞர் தோழர் வே.ஆனைமுத்து உள்ளிட்ட தமிழ்ச் சான்றோர்கள் மறைவுக்கு தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம் இயற்றிய தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி! நன்றி! நனி நன்றி!

திராவிடர் இயக்க ஆட்சியின் நீட்சியாக மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள இன்றைய தமிழ்நாட்டு அரசு, இந்திய ஒன்றியத்தில் மொழி மாநிலங்களுக்கான உரிமைகளற்ற நிலையில், ஒரு மாநிலத்தின் தலைமை அமைச்சராக தன் வரம்புக்கு உட்பட்டு ஒரு மக்கள் நல அரசு தன்னால் என்ன செய்ய இயலுமோ அவற்றை எல்லாம் ஆட்சிப் பொறுப்பேற்ற 100 நாள்களில் ஒவ்வொன்றாய் நிறைவேற்றி வருவது தமிழ்நாட்டு மக்களுக்கும், பெரியாரிய - திராவிடர் இயக்க உணர்வாளர்களுக்கும் நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, ஆட்சிப் பொறுப்பேற்ற 100ஆம் நாளில், தந்தை பெரியாரின் இறுதிக்காலப் போரான அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை நடைமுறைப்படுத்தியமையைப் போற்றி வரவேற்று மகிழ்கிறோம். அந்த வகையில் திமுக தலைமையிலான தமிழ்நாட்டு அமைச்சரவைக்கும், அதன் தோழமை அமைப்புகளுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும் பாராட்டுகள்.

தந்தை பெரியாரின் திராவிடர் இயக்கக் கொள்கைகளை நிறைவேற்றுகிற நிலையில், மொழித் தேசங்களின் மாநில உரிமைகளுக்கு எதிரான பாசிச வெறிபிடித்த பாசக தலைமையிலான இன்றைய இந்திய ஒன்றிய அரசுக்கு எதிரான ஆரியர் திராவிடர்; ஆரியர் தமிழர் போரில் எப்போதும் தங்களுக்குத் தோள்கொடுப்போம் என்கிற உறுதிப்பாட்டையும் அளித்து மகிழ்கிறோம்.

அதேபோல், தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தில் மேனாள் சட்டமன்ற உறுப்பினர்களோடு, இம் மண்ணுக்கும் மக்களுக்கும் மொழிக்கும் பாடாற்றிய சான்றோர்களை நினைவுகூர்ந்து அவர்கள் மறைவுக்கும் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றி வரலாற்றில் பதியவைப்பது நெகிழ்ச்சியானது வரவேற்கத் தக்கது.அந்த வகையில், 6.4.2021 அன்று மறைந்த முதுபெரும் பெரியாரியல் அறிஞர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் அய்யா வே. ஆனைமுத்து அவர்களுக்கும், மற்றும் மூதறிஞர் இளங்குமரனார், பழங்குடி உரிமை ஆர்வலர் தந்தை ஸ்டேன் சுவாமி, அறுவை மருத்துவ நிபுணர் காமேசுவரன், மதுரை ஆதீனம் உயர்திரு அருணகிரிநாதர் ஆகிய சான்றோர் பெருமக்களுக்கும் 16.8.2021 அன்று சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி புகழுரைத்தமையை வரவேற்று மகிழ்வதோடு, தமிழ்நாட்டு அரசுக்கும், முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின், சட்டப்பேரவைத்தலைவர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அனைத்துக்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த பாராட்டுகளையும், நன்றியையும் உரித்தாக்குகிறோம்.

மேலும், தந்தை பெரியாரின் கொள்கைகளை நிலைநாட்டிட தம் வாழ்நாளெல்லாம் பாடாற்றிய பெரியாரியல் பேரறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கிடவேண்டும்; நீதிக்கட்சி வரலாறு, அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர், தோழர் வே.ஆனைமுத்து உள்ளிட்ட திராவிடர் இயக்க, தமிழிய இயக்கத் தலைவர்கள் போராளிகளின் சிந்தனைகளைத் தந்தை பெரியாரின் சிந்தனைகளோடு இணைத்துப் பள்ளிக்கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை மாணவர்களுக்குப் பயிற்றுவிக்க ஏற்ற வழிகாண வேண்டும் என்று திமுக தலைவர் - தமிழ்நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை வேண்டி விரும்பி உரிமையோடு கோருகிறோம். ஆர்எஸ்எஸ் பார்ப்பனியமும் மதவாதச் சிந்தனைகளும் இன்றும் உயிர்ப்போடு இருப்பதன் பின்னணி அச்சித்தாந்தங்கள் கல்வியில் பயிற்றுவிக்கப்படுவதனால்தான் என்பதை நினைவுகூர்ந்து முள்ளை முள்ளால் எடுக்க வழிகாண வேண்டுகிறோம்.

நன்றி. தலைமைக்குழு

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி**

# பெரியார் பிறந்த நாள் விழா ஊர்தோறும் கொண்டாடுவோம்!

**வே. ஆனைமுத்து**

2011 செப்டம்பர் 17 தந்தை பெரியாரின் 133ஆவது பிறந்த நாள். அன்றுதொட்டு தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் நம் கட்சியின் சார்பில் பெரியாரின் பிறந்தநாள் விழாவைச் சிறப்புற நடத்த உள்ளோம்.



கட்சியில் உள்ள நிருவாகி களும், மாணவத் தோழர்களில் விருப்பம் உள்ளவர்களும் ஆங் காங்கே நடைபெறும் விழாக்களில் பங்கேற்பர். பெரியார் கொள்கை களில் எதில் எதில் நாம் வெற்றி பெற்றிருக்கிறோம். எதில் எதில் வெற்றி பெறவில்லை என்பதைப் பற்றிப் பேசவேண்டும்.

"எனவே இந்து மதத்தையும் சாதியையும் இரண்டையும் பார்க்கும் போது, மதத்தை விட சாதியே அதிக பலம் உடையதாகும். ஏனெனில் சாதி பிறவியில் உண்டாவது; அது மாற்ற முடியாதது. ஆனால் மதமோ கொள்கையின் மூலம் ஏற்படுவது. அது மத உணர்ச்சிக்கும் அறிவு உணர்சிக்கும் தக்கபடி அடிக்கடி மாற்றிக் கொள்ள உரிமை உடையது என்பதாகும்" என, 3.11.1929இல் "குடிஅரசு" இதழின் தலையங்கத்தில் பெரியார் குறிப்பிட்டுள்ளார்.

மேலே கண்ட இரண்டில் எதிலாவது நாம் வெற்றி பெற்றிருக்கிறோமா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

சாதி என்பது வருணத்தைக் குறிப்பது. இந்து மதத்தில் பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்பவையும்; நான்கு வருணங்களில் சேர்க்கப்படாமல் உள்ள தீண்டப்படாதார் என்கிறவர்களையும் குறிப்பதாகும், சாதி.

தென்னாட்டில் இந்துமதத்தின் தத்துவப்படி இரண்டு வருணங்கள் மட்டுமே உண்டு. 'பிராமணன்', 'சூத்திரன்' என்பவையே அவை.

தமிழ்நாட்டில் 7.2 கோடி மக்களில் இந்துக்கள் 88 விழுக்காட்டினர். இவர்களில் 100க்கு 3 பேர் மட்டுமே பார்ப்பனர்; மீதமுள்ள 97 விழுக்காட்டுப் பேர்களில் சூத்திரர், தீண்டப்படாதார் என்பவர்கள் அடக்கம். இவர்கள் எல்லோரும் இழிசாதியினர்.

இந்த ஏற்பாடு தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் இருக்கிறது. அப்படி இருக்க எது காரணம்? மக்களிடம் மான உணர்ச்சியே இல்லாததும்; வருணத்தை நம்புவதும் அதைப் பின்பற்றுவதும்; அவ்வப்போது ஆட்சி செய்தவர்கள் சாதி அமைப்பைக் காப்பாற்றியதுமே காரணங்கள் ஆகும்.

இந்த நடப்பு அப்படியே இன்றும் இருப்பதற்கு என்ன காரணம்?

அவர்கள் பிறந்த சாதியை-வருணத்தை மாற்றிக் கொள்ள முடியாது என்பதே காரணம். ஏன் மாற்றிக் கொள்ள முடியாது? உயர்ந்த படிப்பும், நல்ல ஒழுக்கமும் மானிடத்தின்பேரில் நல்ல பற்றும் உள்ளவனாக ஒரு சூத்திரன் நடந்து கொண்டாலும் - அப்போதும் அவன் 'பிராமணன்' ஆக முடியாது; அல்லது சூத்திரப் பட்டத்தை ஒழித்துக் கொள்ள முடியாது. இங்கே தான் சிக்கல் உள்ளது.

அவை என்ன சிக்கல்கள்?

1. இந்திய அரசமைப்புச் சட்டம் - நடப்பில் உள்ள நால்வருண வேறுபாட்டை, எந்தச் சட்டமும், எந்த ஆட்சியும் ஏற்கெனவே நீக்காததால் - அப்படி நீக்கப் படாத அந்த வருணப் பாதுகாப்புச் சட்டம் அப்படியே தொடரும் என்று இன்றைய அரசமைப்புச் சட்டம் பாதுகாப்பு அளித்து உள்ளது. அரசமைப்புச் சட்டத்தில் நான்கு வருணங்களின் பெயர்களைக் குறிக்கா மலேயே - அந்த நால்வருணத்துக்குப் பாதுகாப்பு உண்டு என்று கூறுகிறது.

அரசமைப்புச் சட்டத்தின் விதிகள் 13, 19, 25, 26, 372 முதலானவையே வருண வேறுபாட்டையும், பழைய பழக்கவழக்கச் சட்டங்களையும் இன்று காப்பாற்றுகின்றன.

எவ்வளவு பெரிய படிப்பும், பகுத்தறிவும், பட்டறிவும் உடையவர்களுக்கும் இது புரியாது. அப்படிப் புரிந்து கொண்ட சிலருக்கு ஆத்திரமும் மான உணர்ச்சியும் வரவே இல்லை. ஆத்திரமும் மான உணர்ச்சியும் உள்ளவர்கள் முயற்சித்து எவ்வளவு ஒழுக்கம் உடையவர்களாக மாறினாலும் - அப்போதும் சூத்திரன் என்கிற "பிறவியினால் வந்த இழிவு" போகாது.

அப்பொழுது, இன்றைய அரசமைப்புச் சட்டம் ஒவ்வொரு சூத்திரனுக்கும் எதிரானது-அது தகர்க்கப்பட வேண்டியது - அகற்றப்பட வேண்டியது என்பது புரிய வேண்டும்; அதை வெகுமக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

வெகுமக்கள் இவற்றை அறியாமலே கோவில்களில் வெளியே நிற்பதைச் செய்கிறார்கள். பிராமணனை-பார்ப்பானை அழைத்து வீட்டில் சடங்குகளைச் செய்வதைப் பின்பற்றுகிறார்கள்; பார்ப்பான் குறிக்கிற நல்ல நேரம், கெட்ட நேரம், அதிர்ஷ்டம், துர் அதிர்ஷ்டம் என்பவற்றை நம்புகிறார்கள்; தந்தையையும் தாயையும் இழந்தவர்கள், பார்ப்பானை அழைத்துத் திதி-திவசம் செய்கிறார்கள்; தீட்டுக் கழிக்கிறார்கள்; வீடு குடிபோகும் நிகழ்ச்சி, நீத்தார் இறுதிக்கடன், திருமணம் எல்லாவற்றையும் பார்ப்பானை அழைத்து, அவனை வணங்கி, அவனுக்குத் தட்சணை கொடுத்து மனநிறைவு அடைகிறார்கள்.

எவ்வளவு பெரிய படிப்பைப் படித்தவர்களும், பேரன் பேத்திகளைப் பெற்ற சம்பந்தம் போட்டவர்களும், நாட்டாண்மைக்காரராக - சட்டமன்ற உறுப்பினராக - அமைச்சராக உள்ளவர்களும் மேலே சொல்லப்பட்டபடியே நடக்கிறார்கள்; சாகும் வரையில் அவர்கள் அப்படியே செய்கிறார்கள். அவர் செத்தவுடன் அவருடைய மகன் அவற்றை அப்படியே செய்கிறான்.

இந்தப் "பிறவி சாதி" என்கிற பேரால், தன்னை இழிந்தவன் - நாலாஞ் சாதிக்காரன், கீழ்ச்சாதிக்காரன் என்று சொல்லுவதை ஏற்றுக்கொண்டு, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒவ்வொரு சூத்திரத் தமிழனும் பார்ப்பானை மதித்து அவனைத் தன் வீட்டுக்கு அழைத்து இவற்றைச் செய்வதில் பெருமை அடைகிறான் அல்லது மனநிறைவு அடைகிறான்.

இது மானங்கெட்ட செயல் என்பதை ஒவ்வொரு தமிழனும் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோல் தமிழன் அல்லாத மற்ற மொழிக்காரனும் பார்ப்பனனை அழைத்து, இத்தகைய சடங்குகளைச் செய்வதை நிறுத்த வேண்டும் என்கிற உணர்வு பெற நாம் ஆவன செய்ய வேண்டும். இந்தியா முழுவதிலும் உள்ள மக்களில் 83 விழுக்காடாக இருக்கிற நாலாஞ் சாதிக்காரருக்கு நாம் இவற்றை உணர்த்த வேண்டும்.

இந்தியாவில் இன்று உள்ள இந்துக்கள் 100 கோடிப் பேரில் 93 கோடிப் பேரை இழிசாதி என்று அரசமைப்புச் சட்டம் சொல்லுகிறது; பிறவியினால் ஏற்பட்ட அந்த இழிவை மாற்ற முடியாது என்றும் அரசமைப்புச் சட்டம் சொல்லுகிறது. இதற்குப் பழக்கவழக்கச் சட்டம் என்பது பாதுகாப்பாக இருக்கிறது.

இந்த இழிநிலையைக் காப்பாற்றும் அரசமைப்புச் சட்டத்தை இன்றுள்ள நாடாளுமன்றம் காப்பாற்றுகிறது; 790 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இச்சட்டத்தை ஏற்றுக்கொண்டவர்களாக உள்ளனர். எல்லா மாநிலச் சட்டமன்றங்களும், அவற்றில் உள்ள 4,200 சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த அரசமைப்புச் சட்டத்துக்கு அடங்கி நடக்கிறார்கள்.

மாவட்ட நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றங்கள், உச்ச நீதிமன்றம் ஆகியவையும் இப்படிப்பட்ட கேடான அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்றுகின்றன.

இன்றுவரை மீட்டெடுக்கப்படாத - 93 கோடி சூத்திர மக்களுக்கு உள்ள இழிவுப் பட்டத்திலிருந்து, நாம் அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.

நாம் வாழுங்காலத்தில், இந்தியாவில், இந்த நோக்கத்துக்காகவே வாழ்ந்தவர்கள் - இயக்கம் கண்டவர்கள் - போராடியவர்கள் - போராடச் சொல்லிக் கற்றுக் கொடுத்தவர்கள் தந்தை பெரியாரும், மேதை அம்பேத்கரும் ஆவர்.

17.9.2011-இல் தந்தை பெரியாரின் பிறந்த நாள். அன்று ஊர்தோறும், தெருத்தோறும், வீடு தோறும், பள்ளிதோறும் தந்தை பெரியாரின் 133 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடுவோம், வாருங்கள்!

**(சிந்தனையாளன் 2011-ஆம் ஆண்டு செப்டம்பர் இதழ் தலையங்கம்)**

**மதசார்பற்ற சர்க்கார் என வெளியுலகம் மதிக்கக் கூறிக் கொண்டிருந்தாலும் மதச் சம்பிரதாயப்படி ஹோமம் – பூசை – தீபாராதனை செய்துதான் கப்பல் விடப்பட்டது. சுயராஜ்ஜியம் கூட மதப்படி நல்ல நேரம் பார்த்துப் புகுத்தப்பட்டது.**

**- தந்தை பெரியார்**

# மொழி மீட்பாளர் இளங்குமரனார்

## (30.01.1930 - 25.07.2021)

**- செந்தலை ந. கவுதமன்**

வயிற்றுக்குத் தமிழ் படித்தோர், வாழ்வுக்குத் தமிழ் படித்தோர் எனத் தமிழ்ப் புலமையாளரை இரு பிரிவாக்கலாம். ஆரியத்தை ஆதரித்துத் தம்மை வாழ வைத்துக் கொள்வோர், ஆரியத்தை எதிர்த்துத் தமிழரை வாழவைப்போர் எனவும் அவர்களை வகைப் படுத்தலாம்.

ஆரியத்திடமிருந்து இனத்தை மீட்க எழுந்தது திராவிடர் இயக்கம்; தமிழை மீட்க எழுந்தது தனித் தமிழ் இயக்கம்.

இனமீட்பராகப் பெரியார் எழுந்தார். மொழி மீட்பராக மறைமலையடிகள் எழுந்தார்.

மறைமலையடிகளார் தமிழுக்கும் சைவத்திற்கும் சமபங்கு அளித்தவர். தமிழுக்கு மட்டுமே இடம் தந்து தனித் தமிழியத்தை அடுத்தகட்டத்திற்கு உயர்த் தியவர் திராவிட மொழிநூல் ஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர்.

பாவாணர் வழியை வளப்படுத்த வந்தோரில் குறிப்பிடத்தக்கவர் புலவர் இரா. இளங்குமரனார். பாவாணர் 1968-இல் உலகத் தமிழ்க் கழகத்தைத் தொடங்கு முன், 10.7.1962-இல் தமிழ்க் காப்புக்கழகம் கண்டவர் பேராசிரியர் சி. இலக்குவனார். இவ்வமைப்பின் முதலாவது பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர் புலவர் இரா. இளங்குமரனார்.

தமிழ்க்காப்பு, தமிழ் மீட்பு என இரு நோக்கத்தோடு கருத்துப்போரை எழுத்து வழியாகவும் களப்போரைச் செயல் வழியாகவும் நிகழ்த்தியதால் தமிழ்நாட்டின் கவனத்தைப் பெற்றவர் இளங்குமரனார்.

இவர் தந்தையார் பெயர் இராமு. எப்போதும் படித்துக் கொண்டே இருக்கும் பழக்கம் உடையவர் என்பதால் ஊர் மக்கள் வைத்த பெயர் படிக்கராமு.

தாயார் பெயர் வாழவந்தாள்! அவர் பெயரை நினைவூட்டுவதாய் அமைந்துவிட்டது ஊரின் பெயர். வாழவந்தாள்புரம் என்பதே ஊர்ப்பெயர்!

பெற்றோருக்கு இவர் எட்டாவது குழந்தை. எட்டாவது குழந்தைக்கு அந்த நாளில் 'கிருஷ்ணன்' எனப் பெயர் வைப்பது வழக்கம். கிருஷ்ணன் என்ற பெயரை 'இளங்குமரன்' என இவர் மாற்றிக் கொள்ளக் காரணமாய் இருந்தது மறைமலையடிகளார், தேவநேயப் பாவாணர் வழியாகப் பெற்ற தனித்தமிழ் உணர்ச்சி.

தொடங்கியதென்னவோ தொடக்கப் பள்ளி ஆசிரியராகத்தான்! ஓய்வுபெற்றதோ மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வு அறிஞராக!

ஆசிரியப் பணியைத் தொடங்கிய போது இவருக்குப் பதினாறு வயது. அதே வயதில் இவருக்குத் திருமணமும் ஆகிவிட்டது. வாழ்க்கைத் துணைவியாக வந்தவர் செல்வம் அம்மையார்.



6.1.2013இல் வேலூரில் நடைபெற்ற பொங்கல் மலர் வெளியீட்டு விழாவில் இளங்குமரனார் பொங்கல் மலரை வெளியிட்டுச் சிறப்பித்தார்

ஆசிரிய வாழ்வையும் இல்லற வாழ்வையும் அடிமை இந்தியாவிலேயே தொடங்கிவிட்டார். தொடக்கப் பள்ளி ஆசிரியப் பணியைத் தாம் பிறந்த ஊரிலேயே 8.4.1946-இல் தொடங்கினார். புலவர் பட்டம் பெற்ற பின் தமிழாசிரியப் பணியை 1951-இல் கரிவலம் வந்த நல்லூரிலும் தளவாய் புரத்திலும் தொடர்ந்தார். நீண்டகாலம் பணியாற்றியது மதுரை மு.மு.மேல் நிலைப்பள்ளியில்!

தொடர்ந்து 43 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றும் வாய்ப்பை இளங்குமரனார் பெற்றதுபோல், இனியொருவர் பெறுவது அரிது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வு அறிஞராகப் பணியாற்றிய போது, இவர் உருவாக்கியது 'தொல் காப்பியக் கலைச்சொற் களஞ்சியம்'. நான்காண்டு கால உழைப்பில் அது உருவானது.

தொல்காப்பியம், திருக்குறள் இரண்டையும் தமிழுக்கு வாய்த்த இரு கண்கள் எனப் போற்றுவது இளங்குமரனார் வழக்கம். இரு நூல்களையும் பல கோணங்களில் பார்த்து, இவர் வெளிப்படுத்தியுள்ள நூல்களே எண்ணிக்கையில் மிகுதி.

பாவாணர், இலக்குவனார், பெருஞ்சித்திரனார் முதலிய இவரின் மதிப்பிற்குரிய பலர் திருக்குறளுக்கு உரை வரைந்திருந்தாலும் இவர் மனம் அவற்றில் நிறைவடையவில்லை.

> "தந்தை பெரியார் எவை எவை திருக்குறளில் பொருந்தாதன உள்ளன என்றாரோ, அவை யெல்லாம் உரை கண்டவரால் நேர்ந்தவை. வள்ளுவத்தில் பொருந்தாதது எதுவும் இல்லை. நாம் திருக்குறள் முழுமைக்கும் உரை எழுதிவிட்டால் பெரியார் எண்ணத்தை நிறைவேற்றியதாகும்."
> (இளங்குமரனார் தன் வரலாறு, ஒரு புல், ப.28)

இந்த நோக்கோடு இளங்குமரனார் உருவாக்கியதே திருக்குறள் வாழ்வியல் உரை. ஈரோட்டில் இந்நூல் ஒரு மாத கால வினா விளக்க நிகழ்ச்சியோடு அரங்கேறியது. உரையாசிரியர்களின் சொல்லாய்வு நுட்பங்களில் தேர்ந்தவர் இவர்.

திருவையாறு அரசர் கல்லூரியில் நான்பயின்ற 1971-ஆம் ஆண்டு, இளங்குமரனார் நூல் தற்செயலாக அறிமுகமானது. கல்லூரி நூலகத்தில் எடுத்துப் படித்த 'உரையாசிரியர் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம்' தந்த ஈர்ப்பு இவரின் ஒவ்வொரு நூலையும் தேடிப் படிக்க வைத்தது.

நூலோடு நேர்ந்த பழக்கம். இவரோடு இணைந்து பல ஊர்களுக்கும் செல்லும் பொழிவு வாய்ப்பாக வளர்ந்தது. எந்த ஊரில் எந்தப் பொருளில் பேசினாலும் அதனை உடனே நூலாக விரித்தெழுதும் வழக்க முடையவர் இளங்குமரனார்.

> "இவ்வளவு செய்திகளைத் திரட்டி வந்து பேசும் நீங்கள், உடனே இவற்றை நூலாக எழுதுங்கள்."

ஒவ்வொரு முறையும் இளங்குமரனார் இந்த அறிவுரையைத் தவறாமல் கூறுவார். மிக அரிதாகத்தான் அதனை என்னால் பின்பற்ற முடிந்தது.

'திரு.வி.க. இப்படித்தான் செய்வார்' எனத் தம் எழுதுமுறை முன்னோடியாக அவரைக் காட்டுவார். பேசிய உடனேயே குடிஅரசு, விடுதலை ஏடுகளுக்கு எழுதி அனுப்பும் பெரியார் வழக்கத்தையும் ஒப்பிட்டுப் பேசுவார்.

திருவள்ளுவர், மறைமலையடிகள், திரு.வி.க., தேவநேயப் பாவாணர், நால்வரும் தந்த நூல் வெளிச்சத்தில் நடப்பதாகப் பெருமிதம் கொள்பவர் புலவர் இளங்குமரனார்.

தமக்குப் பெயர் தந்தவராக மறைமலை அடிகளாரை யும் நெஞ்சம் தந்தவராகத் திரு.வி.க.வையும் தோள் தந்தோராகப் பாவாணர் இலக்குவனாரையும் துணிச்சல் தந்தோராகப் பாரதியார், பாவேந்தரையும் குறிப்பிடுவது இளங்குமரனார் வழக்கம். தம்மை வடிவமைத்த அடித்தளங்களை மறக்காத அந்த இயல்பே, இவரைப் பலரும் வழிகாட்டியாக நினைக்கும் அளவிற்கு உயர்த்தியது.

> "தனித்தமிழ்ச் சொல்லாய்வாளர், வரலாற்று ஆசிரியர், உரையாசிரியர், படைப்பாளர், பாவலர், பதிப்பாசிரியர், பழம்நூல் மீட்பர்"

எனப் பல முனைகளிலும் விரிந்த அறிவுப் பரப்பைக் காட்டுவன இவரின் நூல்கள்.

ஐநூறுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிய இளங்குமரனார், அத்தனையும் கைப்பட எழுதியவை. மறைவதற்குச் சில நாள் முன்பு இவர் இறுதியாக எழுதிய எழுத்தும் மணிமணியாக உள்ளது.

எழுத்து நடுக்கமும் நினைவுத் தடுமாற்றமும் வாராத பெரும்பேறு, 91 வயதிலும் இவருக்கு வாய்த்தது வியப்பு.

கருத்துப் பணியோடு நின்றுவிடாமல், தமிழ் காக்கும் களப்பணி வீரராகவும் செயல்பட்டார். அறிஞர் சி. இலக்குவனார் உருவாக்கிய தமிழ்க்காப்புக் கழகத்தின் பொதுச் செயலாளராகத் திகழ்ந்தார்.

பாவாணரின் 'உலகத் தமிழ்க்கழகம்', 'குறளாயம்' என இவர் பணியால் பயன்கொண்ட அமைப்புகள் பல.

தமிழ்ப் பயிற்று மொழியை வலியுறுத்திச் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் 25.4.1999-இல் நடந்த உயிர் துறக்கும் போராட்டத்திலும், 102 அறிஞர்க் குள் ஒருவராகத் தோள்தட்டி நின்றவர் இளங்குமர னார்.

தமிழர் வாழ்வின் எல்லா நிலைகளிலும் தமிழை முன்னிறுத்த வேண்டும் என்பதற்காக திருச்சிராப்பள்ளி காவிரியாற்றங்கரையில் 'திருவள்ளுவர் தவச்சாலை' நிறுவினார். தமிழில் திருமணம், குடமுழுக்கு, வாழ்வியல் சடங்குகள் நடத்தவல்ல நூற்றுக்கணக்கானோரைப் பயிற்சி தந்து உருவாக்கினார்.

தமிழில் திருமணம் நடத்துவதை 21 வயதில் தொடங்கி, எழுபதாண்டுகள் தொடர்ந்து நடத்தி வந்தார். நான்காயிரத்திற்கு மேற்பட்ட திருமணம் நடத்தி வைத்திருப்பதைப் பட்டியலிட்டு ஆவணப்படுத்தியுள்ளார்.

இவரின் சொல்லாய்வுத் திறம் வியந்த தேவநேயப் பாவாணர், தமது 'செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலி'த் திட்டத்தின் சிறப்புத் தொகுப்பாளராக இவரை இணைத்துக் கொண்டார்.

தமிழுக்குக் கிடைத்த அரும்பொருள் வைப்பாகப் பாவாணர் வழங்கியுள்ளவை 58 நூல்கள்! புலமை வாய்ந்தோரே பாவாணர் நூலோடு உறவாட முடியும்.

பாவாணர் நூற்பரப்பு முழுமையிலும் பரவிக் கிடக்கும் வேர்ச்சொல்லாய்வு விளக்கங்களைத் திரட்டி, பாவாணர் நூல்களுக்கு நுழைவாயிலாக 'தேவநேயம்' என 14 தொகுதிகளை வழங்கியுள்ளார் இளங்குமரனார்.

பாவாணர் வரலாற்றை எழுதியுள்ள இவர், பாவாணர் மடல்களைத் திரட்டி இரு தொகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

தொல்காப்பியத்தில் மனம் தோய்ந்து மூழ்கி எழுந்த இளங்குமரனார், தொல்காப்பிய முழு நூற்பிழிவாக வழங்கியுள்ள அரிய நூல் 'தமிழர் வாழ்வியல் இலக்கணம்'. தொல்காப்பியத்தில் புலமை பெற விரும்புவோர்க்கு இவர் வழங்கியுள்ள வழிகாட்டி நூல் 'தொல்காப்பியம் சொற்பொருட்களஞ்சியம்'.

தமிழ்ச் சொற்கள் ஒவ்வொன்றுக்கும் பொருட் காரணம் உண்டு என்பார் தொல்காப்பியர். 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது நூற்பா. அதனை உறுதிப்படுத்தும் பெரு முயற்சியில் ஈடுபட்டு, 'செந்தமிழ்ச் சொற்பொருட் களஞ்சியம்' எனும் பத்துத் தொகுதிகளை வழங்கியுள்ளார் இளங்குமரனார். 'அழகு' எனும் ஒரே ஒரு சொல்லுக்கு 67 பொருள் உண்டு என்று மெய்ப்பிக்கும் அழகே அழகு.

இவர் எழுதியவை அனைத்தும் மக்களை எட்டும் அரும்பணியைச் சென்னை தமிழ்மண் பதிப்பகம் வாயிலாக நிறைவேற்றியிருப்பவர் (அண்மையில் மறைந்த) கோ. இளவழகனார்.

இளங்குமரனார் எழுதியவை தமிழ்மண் பதிப்ப கத்தால் உடனுக்குடன் நூலானதால் ஊக்கம் பெற்ற இவர் தொடர்ச்சியாக எழுதிக் குவித்தார்.

'நேரம் கிடைக்கும் போதெல்லாம் படிப்பேன்.
படிக்காதபோது எழுதிக் கொண்டிருப்பேன்'

இப்படியொரு வாழ்க்கை முறையை இவர் அமைத்துக் கொண்டதால், எழுத்தாலும் படிப்பாலும் தமிழே இவரின் மூச்சானது.

'ஒரே ஒரு நூலை மட்டும் படித்து அறிஞராக முடியுமா?' என வினவுவோர்க்கு இளங்குமரனார் விரல் நீட்டும் நூல் 'புறத்திரட்டு'. புறத்திரட்டைப் படிக்கும் எவரும் அறிஞராவது உறுதி என்பார்.

அழிந்துபோன நூல்களாகக் கூறப்பட்ட காக்கைபாடினியம், களவியற்காரிகை முதலிய பல நூல்கள் இவரால் உயிர் பெற்றன.

தமிழரின் வாழ்வியல் நடைமுறைகளை விளக்கும் 'தமிழக ஒழுகு' எனும் அரிய நூலை இவரைப் பதிப்பிக்கச் செய்து வெளியிட்டுள்ளது பாரதிதாசன் பல்கலைக்கழகம்.

அந்த நூலை எழுதிய விருதை சிவஞான யோகி 19.11.1908-இல் தொடங்கிய திருவிடர் கழகமே முதல் தனித்தமிழ் அமைப்பு என இளங்குமரனார் வெளிப் படுத்தியபோது, வியந்தது தமிழுலகம்! திருவிடர் கழகத்தில் உறுப்பினராக இருந்த சுவாமி வேதாசலம், அங்குப் பெற்ற தனித்தமிழ் உணர்வால் 1916-இல் விரிந்த அளவில் உருவாக்கியதே தனித்தமிழ் இயக்கம்.

தனித்தமிழ் இயக்கம் (1981), தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுகள் (1985), இலக்கண வரலாறு (1990) முதலான ஆய்வு நூல்களால் ஆய்வுச் செழுமைக்கு வலிமையூட்டினார் இளங்குமரனார்.

சுவடிகள் அச்சேறிய வரலாற்றை விளக்கும் இவரின் சுவடிக்கலை (1984), சுவடிப் பதிப்பு வரலாறு (1990) நூல்கள் கடும் உழைப்பில் பிறந்தவை என்பதை அறிந்தோர் சிலரே!

சி.வை. தாமோதரனார், உ.வே.சா. வழியில் பழைய நூல்களைத் தேடிப் பதிப்பிப்பவராக நம் காலத்தில் திகழ்ந்தவர் புலவர் இளங்குமரனார்.

அரசஞ்சண்முகனார் வரலாற்றை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்த இவர், சோழவந்தானுக்குச் சென்றுள்ளார். அரசஞ்சண்முகனாரின் சொந்த ஊர் சோழவந்தான்.

பெரும்புதையல் போல அரிய நூல்களும் ஆவணங் களும் அங்கே இவருக்குக் கிடைத்தன. தனித்தமிழ் காக்கும் முதல் அமைப்பாக 1908-இல் சிவஞான யோகி உருவாக்கிய 'திருவிடர் கழகம்' தொடர்பான வியப்பான ஆவணங்கள் அங்கே கிடைத்துள்ளன. அந்த அமைப்பில் உறுப்பினராக இருந்த 'சுவாமி வேதாசலம்' பின்னர் மறைமலையடிகள் ஆனார். தனித்தமிழியக்கத்தை விரிவுபடுத்திச் செயல் வேகமூட்டி னார் என்பதையெல்லாம் அந்த ஆவணங்கள் பேசின.

தமிழருக்கான வாழ்க்கைச் சட்ட நூல் இல்லை என்பது இன்றுவரை குறையாகத் தொடர்கிறது. ஈழத் தமிழருக்குத் 'தேசவளமைச் சட்டம்' உள்ளது.

தமிழரின் வாழ்க்கைச் சட்ட நூலாகச் சிவஞான யோகி 'தமிழக ஒழுகு என்ற மக்கட் சட்டம்' என்ற நூலை 1923-இல் எழுதியிருப்பதைக் கண்டுபிடித்தவர் இளங்குமரனார். திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகம் அந்த நூலை அழகிய பதிப்பாக 2010-இல் வெளியிட்டுள்ளது. அந்த நூல் இரு பாகங்களைக் கொண்டது.

ஒரு பகுதி கிடைத்தும் இரண்டாம் பகுதி கிடைக்க வில்லையே என்ற ஏக்கத்துடன் இளங்குமரனார் வாழ்வு நிறைவு பெற்றுவிட்டது. ●

# மா.பெ.பொ.க மகளிரணியின் பேராற்றல்

# மருத்துவர் தோழர் எ.செம்மலர் மறைந்தார்!



**குழலினிது யாழினிதுஎன்பதம் மக்கள்**
**மழலைச்சொல்கேளாதவர்**

என்றார் தமிழர் வாழ்வியலை வகுத்தளித்த வள்ளுவப் பெருந்தகை. ஆனால், அன்பு நிறைத் தோழி செம்மலர் குரல் கேட்டிருப்பின் அவ் வள்ளுவப் பெருந்தகை தம் குறளை மாற்றி யிருப்பாரோ! என்று எண்ணுகிறஅளவுக்குத் தம் மலரினும் மெல்லிய குரலால் மலையினும் கடினமான செய்தியைக் கூட மிக எளிமையாக, இனிதே எடுத்துரைக்கும் வல்லமை வாய்ந்தவர் நம் செம்மலர்..!

யாராகினும், எந்நேரமாயினும், எந்நிலையா யினும், எந்தச் சிக்கலுக்காகவும் அவரைக் கைப்பேசியில் அழைத்தால் சொல்லுங்க தோழர், எப்படி இருக்கீங்க! எனும் இன்சொல்லைக் கூறி, மெல்லிய புன்னகையோடு கேட்பவருக்கான விடையையோ மருந்தையோ கொடுக்கும் அன்பும் அறனும் நிறைந்தவர்..

**முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி அகத்தானாம்**
**இன்சொலினதே அறம்**

எனும் அறத்தின் வழிநின்று மனிதம் அறக்கட்டளை வழியாக மனிதம் காக்கும் ஒல்லியல் மருத்துவம் வழங்கி வாழ்வாங்கு வாழ்ந்தவர்..

ஆருயிர்த் தோழன் அன்புத் தலைமயன் தி.துரைசித்தார்த்தன் அவர்களை வாழ்விணையராக ஏற்ற நாள் முதல், 14 ஆண்டுகள் நம் கட்சிக் குடும்பத்தார் பலரின் உடல்நலம் மீதும் அளவற்ற அக்கறை கொண்டு மருத்துவக் குறிப்புகள் வழங்கியவர்..

தோழர் ஆனைமுத்து மீது வான் கடந்த மதிப்பும் மாறாப் பற்றும் கொண்டவர். அய்யாவின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றவர் நம் செம்மலர் என்பதற்கு அய்யா ஆனைமுத்து பங்கேற்ற இறுதிப் பொதுக்குழுவே சான்று..!

கொரோனா பெருந்தொற்று முதல் அலையில் பார்ப்போருக்கெல்லாம் தற்காப்பு மருத்துவக் குறிப்புகளைச் சொல்லி, தேடித் தேடிச் சென்றும், நேரில் அழைத்தும், அஞ்சல் வழியிலும் மருந்துகளை வழங்கிய மனிதநேயர்..

18.5.2021 செவ்வாய்க்கிழமை அன்று காலை திருச்சிக்கு மருத்துவமனைக்கு அவர் செல்லுகிற போது கூட தோழர்களுக்கும், நண்பர்களுக்கும், தாம் மருத்துவமனைக்குச் செல்கிறேன் என்கிற செய்தியைச் சொல்லாமல், பெருந்தொற்று குறித்த மருத்துவ ஆலோசனைக்கு இன்னொருவரை அணியப் படுத்தி வைத்துவிட்டுப் பதிவிட்ட பின்வரும் செய்தி இதோ ..

"அனைவருக்கும் வணக்கம். நான் வெளியூர் செல்வதால் உங்கள் அழைப்பை ஏற்க முடியாத சூழ்நிலையில் உள்ளதால் மருத்துவ ஆலோசனை பெற மருத்துவர் மஞ்சுளா அவர்களை தொடர்பு கொள்ளவும். நன்றி!"

இதுவே அவர் வழங்கிய இறுதிச் செய்தியாகி விட்டது. அய்யகோ! வெளியூர் செல்வதாகச் சொன்னவர் வீடு திரும்பவே இயலாமற் போய் விட்டது.

இரண்டாம் அலை பற்றிய அவரின் கணிப்பும், தம் மருத்துவத்தின் மீது அவர் கொண்டிருந்த அளப்பரிய நம்பிக்கையும், உறுதியுமே அவரைக் காவு வாங்கிவிட்டது என்பது மறுக்க முடியாத உண்மையாகிவிட்டது.. தாம் மருத்துவக் கொள்கை யை நிலைப்படுத்த தன்னையே கொடையளித்து விட்டார் மக்கள் மருத்துவர் செம்மலர்..

26.11.2006-இல் சித்தார்த்தன்-செம்மலர் மணவிழா அழைப்பு அச்சடிக்க முதன்முதலாகத் திருச்சியில் சந்தித்த நாள் முதல் 18.5.2021 மருத்துவமனைக்குச் செல்லும் வரை எல்லா நிகழ்வுகளும் வந்து வந்து நெஞ்சை மோதிச் செல்கின்றன. காற்றினும் மெல்லிய அந்தக் குரல் இப்போதும் காதுகளில் நினைவுகளாக ஒலித்துக் குடைகிறது..

தந்தை பெரியார் அவர்கள் தம் துணைவியார் நாகம்மையார் மறைந்தபோது எழுதிய இரங்கல் இலக்கியத்தின் ஆழத்தை தோழர் ஆனைமுத்து எழுத்துகளால் தான் எல்லோரும் அறிந்தோம். மாமேதை மார்க்சு - ஜென்னி இணையரின் ஒப்பற்ற காதலை அய்யா ஆனைமுத்து அவர்கள் தம் துணைவியார் சுசீலா அம்மமையாருக்கு எழுதிய இரங்கலின் வழி புரிந்தோம். இவ்விரண்டின் வலியை ஆருயிர்த் தோழன் சித்தார்த்தன் தம் செம்மலரை இழந்து வாடி வதங்கியதை நேரில் கண்ணுற்ற போதுதான் உணர முடிந்தது..

25.05.2021 காலையில் செம்மலருக்கு முதல் சுற்றில் மருத்துவம் பார்த்த மருத்துவர் இராமமூர்த்தியிடம் பேசியபோது, “ஆறுநாள் கடந்து விட்டது. அது நம்பிக்கை தருகிறது!” என்றார். அன்று காலை 10 மணிக்கு செம்மலர் மாறாத இன்முகத்துடன் கையசைத்த காணொளியைக் கண்ணுற்றதும் தோழர்களுக்கும் உறவுகளுக்கும் முன்னனுப்பி செம்மலர் மீண்டு விடுவார் என்று மகிழ்ச்சி பொங்கச் சொல்லி வந்தோம்.. நாள்தோறும் செம்மலரின் உடல்நிலை பற்றிக் கேட்டு வந்த தோழர் மதனகவி, காணொளி கண்டதும் “இப்போதுதான் தோழர் ஒரு வாரம் இருந்த மனக்குடைச்சல் போயிற்று!” என்றார்..

எழுந்து வருவார் என்று எல்லோரும் நம்பியிருந்த வேளையில், அன்புத் தோழமை, தங்கை செம்மலர் தம் இறுதிப் பயணத்தைத்தான் அதே மெல்லிய புன்முறுவலோடு கையசைத்துப் பிரியா விடை சொல்லி அனுப்பி வைத்துவிட்டார்..!

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மகளிர் அணியின் ஆற்றல்மிக்க தோழர் மக்கள் மருத்துவர் எ. செம்மலர் 26.5.2021 புதன் கிழமை அன்று நண்பகலில் நம்மைப் பிரிந்தார். திருச்சி அரசுப் பொது மருத்துவமனையிலிருந்து 27.5.2021 காலை பகல் 11.45 மணிக்கு மா.பெ.பொ.க. கொடிபோர்த்தி செவ்வணக்கம் செலுத்தி வழிய னுப்பி வைத்தோம்.

இறப்பை ஏற்கும் பகுத்தறிவு உள்ளங்களுக்கும் தோழர் செம்மலரின் இறப்பை ஏற்பதென்பது மலையினும் கடினமானதாகி மறுக்கிறது..

மக்கள் மருத்துவர் செம்மலர் தம் நுல்களான ‘ஒமியோ எனும் ஒல்லியல் மருத்துவம்’, ‘மழலை மொழி அறி’, ‘நோயும் மனமும்’ போன்ற நூல்களின் வழி வரலாற்றிலும், அவர் காட்டிய அன்பறம் வழி எல்லோர் நெஞ்சத்திலும் இறவாது வாழ்வார்..!

**தோழர் செம்மலருக்கு செவ்வணக்கம்!**

**- முனைவர் முத்தமிழ்**

## செவ்வணக்கம், செம்மலரே!

மலரே! செம்மலரே
தலைவன் வாட - நீ
மறைந்தாய்,
கொள்கை குன்றாது - நீ
வாழ்ந்தாய்!

அறிஞர் ஆனைமுத்துவின் படையில்
மகளிரணித் தலைவியாய்த் திகழ்ந்தாய்
தோழர் சித்தார்த்தனின் பணிக்கு
நெம்புகோலாய் இருந்தாய்!

நும்மக்கள் இருவருக்கும்
உற்றதுணை சித்தார்த்தனுக்கும்
என்ன சொல்லித் தேற்றுவது?
தேற்றப்பட முடியாத நாங்கள்

நேருமோ இப்படியுமொரு
துன்பம் எங்களுக்கு
சிந்திப்பதை நிறுத்தி - எங்கள்
சிந்தையைக் கலங்கச் செய்தாயே

இறப்பை ஏற்கும்
பகுத்தறிவு உள்ளமும்
உங்கள் முதிராச் சாவை
ஏற்க மறுக்கிறது - பெருந்தொற்று
வாழ்வின் மீதான
நம்பிக்கையைச் சிதைக்கிறதே!


உங்களை வழியனுப்பும்
மனத்திடம் எனக்கில்லை
சென்று வாருங்கள் என்று சொல்ல
வாய் இல்லை

உங்களின் பகுத்தறிவுப் பயணத்தை
என் துணைவருக்குக்
கற்பிக்க முயற்சிக்கிறேன் - அதுவே
உங்களுக்குச் செலுத்தும்
வீர வணக்கமென நம்புகிறேன்.

**- கு.ப.நா. மதனகவி**

# இனிச் செய்ய வேண்டிய வேலை

- பெரியார்



சுயமரியாதை இயக்கமானது, பன்னெடுங்காலமாக இந்திய சமூகத்தைப் பாழ்படுத்தி அதன் இரத்தத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சி உயிரை வாங்கிக் கொண்டிருந்த மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்கவழக்கங்களையும் அடியோடு ஒழித்துவிடுவான் வேண்டித் தங்கள் உயிர், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யக்கூடிய பலரைத் தன்னிடம் ஈர்த்துக் கொண்டிருக்கிறது. மக்களின் அறியாமையை அனுகூலப்படுத்திக் கொண்டு அவர்களைப் பல வகைகளில் அடிமைப்படுத்தலை ஒழித்து, பகுத்தறிவை வளரச் செய்வதற்காகவே இவ் வியக்கம் பாடுபட்டு வருகிறது. அதன் பலன்களும் திருப்திகரமானவைகளாகவேயிருக்கின்றன. வெகுகாலமாக சுயநலவாதிகளால் அழுத்தப்பட்டு அறியாமையில் ஆழ்ந்திருந்த பாமர மக்கள் மனித உரிமையை உணர ஆரம்பித்து விட்டார்கள். பரம்பரை வழக்கம் என்பதற்காகவோ "பெரியோர் வாக்கு" என்பதற்காகவோ விசேஷ மதிப்புக் கொடுப்பதில்லை. சுயநலமிகள் கொஞ்சங் கொஞ்சமாக ஒழிந்து கொண்டிருக்கிறார்கள். இந்திய மக்கள் தமது நிலையை உணர்ந்து கொண்டார்கள். இனி அவர்களை ஏமாற்ற முடியாது. காலப்போக்கும் சீர்திருத்தக்காரர்களுக்கே ஆதரவாயிருக்கிறது. பகுத்தறிவுக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பவைகளெல்லாம் மடிந்து கொண்டே இருக்கின்றன.

யாவராலும் விரும்பப்படும் ஒரு பெரிய இலட்சியத்தைக் குறித்து இதுவரை தன்னந்தனியாகவும் புகழை இச்சிக்காமலும் தமக்குத் தோன்றிய முறையில் போராடி வந்த தொண்டர்களெல்லாம் முதன்முதலாக செங்கல்பட்டில் கூடப்போகிறார்கள். ஆகவே செங்கல்பட்டு மகாநாடானது சமூகச் சீர்திருத்த இயக்கத்தில் மிக முக்கியமானதாகும். இங்கு நம் முழு ஆற்றலையும் திரட்டி ஒருங்கே எதிர்க்க ஆயத்தமாக வேண்டும். இனி நாம் தனிப்பட்ட ஒரு மனிதனின் முயற்சியிலாவது சில்லறை வெற்றிகளிலாவது திருப்தியடைந்து விடக்கூடாது. இனிச் செய்ய வேண்டிய காரியங்களை ஜாக்கிரதையாக ஓர்ந்து நமக்கிருக்கும் ஆள்வலி, தோள்வலி, பொருள்வலி ஆகியவைகளைச் சரியாகக் கணக்கெடுத்து எல்லா அம்சங்களையும் கொண்ட சரியான ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும். மகாநாட்டுக்கு வரும் பிரதிநிதிகளை, முரட்டுத்தனமான பயனற்ற விவாதங்களில் பொழுது போக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறோம். வாய் வேதாந்தமானதும் வார்த்தைகள் நிரம்பியதுமான தீர்மானங்கள் செய்வதில் பயனில்லை. வாய் வேதாந்தங்களினாலும் இனிய வசனங்களினாலும் ஏமாந்து மோசம் போனவர்களைப் பார்த்து நாம் பயனடைவோம். நம் தீர்மானங்கள் எல்லாவித இயற்கை உணர்ச்சிகட்கும் தத்துவங்கட்கும் ஏற்ற முறையில் குறிப்பாகவும் துரிதமாகவும் நடைபெறக்கூடியவாறு வகுக்கப்பட்டு இருக்க வேண்டும். இக்காலத்தில் நம் நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் இவ்வுணர்ச்சி தலைசிறந்து விளங்குகிறது. எனவே இவ்வுணர்ச்சியை முறையாகவும் சீராகவும் தொடர்ச்சியாகவும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டிய வழிகளைக் கவனிப்போம்.

நம் இலட்சியம் இன்னது என்பது வெள்ளிடைமலை. எனவே நாம் அதைப்பற்றி விவாதிக்க வேண்டியதில்லை. நடைமுறையின் முற்போக்கு நடத்துவிப்பவருக்குத் தக்கபடியும் கால தேசவர்த்தமானங்களுக்கு ஏற்றபடியும் இருக்கும். எனினும் முன்னேற்றத்தின் போக்கு ஸ்திரமானதே. அதாவது ஜாதிபேதம், பிறவியினால் உயர்வு தாழ்வு, சம்ஸ்காரம், மறுபிறவி, அவதாரம், சிலை வணக்கம். அதன் அண்ணனான புரோகிதம், மதச்சின்னம், சடங்குகளாகியவைகளை நாம் சீர்திருத்தமாகிய புதுக்கட்டடத்தைக் கட்டுமுன்னரே இடித்துத் தள்ளிவிட வேண்டும். பிறவியினால் உயர்வு உண்டு என்னும் எண்ணம் மக்கள் மனத்தினின்று நீங்கினாலொழிய தீண்டாமையையொழித்தலும், பெண் மக்கள் முன்னேற்றமும் முடியாதவை. பிறவியினால் உயர்வு தாழ்வு என்னும் பொய்க் கொள்கையே சாதிப் பாகுபாட்டிற்கு இடங்கொடுத்தது. ஆண், பெண்ணிலும் மேம்பட்டவன் என்னும் அகம்பாவமானது பெண்களைக் கோஷாக்களாகவும் சொத்துரிமையற்றவர்களாகவும் ஆண்களுடைய சொத்துக்களாகவும் ஆக்கியிருக்கிறது. சம்ஸ்காரங்கள் கலியாணத்தைக் கேலிக்கூத்தாக்கி இளமையின் சிறப்பை நாசமாக்கிவிட்டது. மறுபிறவி, அவதாரங்கள் என்னும் கொள்கைகள் மக்களை நிரந்தரமான சோம்பேறிகளாக ஆக்கிவிட்டன. எனவே நம் மக்களுக்குள் மனித உணர்ச்சியை எழுப்ப வேண்டுமானால் நாம் அக்குருட்டு நம்பிக்கைகளின் மூலகாரணங்களை வேரோடு களைய வேண்டும். நம் மக்கள் பழைய சின்னங்களையும் சடங்குகளையும் மந்திரங்களையும் பின்பற்றி நம்பிக்கொண்டிருக்கும் வரை எந்த இந்தியனும் பிற நாட்டாருடன் சம உரிமைக்குப் போராட முடியாது. இந்த அறிவு ததும்புங் காலத்திலுங்கூட வெட்கமின்றித் தம் நெற்றிகளில் மதச்சின்னம் அணிவதைப் பார்க்க விந்தையாயிருக்கின்றது. உயர்வைக் குறிப்பதாகச் சொல்லப்படும் தோள்களில் தொங்கும் பூணூலானது அணிதிருப்பவனின் மனிதத்தன்மை அற்றத்தன்மையைத் தெளிவாய்க் குறிக்கிறது. ஓமம், திவசம், பிறப்பு, இறப்பு முதலிய காலங்களில் சொல்லப்படும் மந்திரங்களும் மனக் கண்ணைக் கெடுத்து மனிதனை அஞ்ஞான இருளில் ஆழ்த்துகின்றன. ஒரு நாகரிகமுற்ற சமூகமென்றால் சடங்குகளுக்குத் தண்டனை விதித்தாக வேண்டும். இந்த மாதிரிக் கொடிய


மோசம் செய்கிறவர்களைத் தீயிலிட்டுக் கொளுத்தி னாலும் தக்க தண்டனையாகாது. நம் உற்சவக் காலங் களில் நடக்கும் குடிகாரக் கலகங்களும், அசிங்கங் களும், ஆபாசங்களும் எந்தக் காலத்திலும் வேறு எந்த நாட்டிலும் இருந்ததில்லை. திருவிழாக்கள் தொலைந்து உடல்நலத்திற்கும் மனோநலத்திற்கும் வேண்டிய வசதிகள் ஏற்பட வேண்டும்.

**சிலை வணக்கந்தான் எல்லாத் தீமைகளுக்கும் பிறப்பிடமாயிருப்பது. நாட்டின் மதிப்பைக் காப்பாற்ற எண்ணமுடைய ஒவ்வொருவனும் கற்சிலைகளைத் தகர்த்துச் சிலைகளையுருக்கி அவ்வுலோகத்தைக் கொண்டு ஆயுதங்களும் இயந்திரங்களும் செய்விக்க வேண்டும். மத சம்பந்தமாக விடப்பட்ட சொத்துக்க ளெல்லாம் நாட்டின் நலத்திற்கு உபயோகப்படுத்தப்பட வேண்டும். மடங்களைப் பள்ளிக்கூடங்களாகவும் கல்லூரி களாகவும் மாற்ற வேண்டும். கோவில்கள் ஆஸ்பத்திரி களாக வேண்டும். புரோகிதரை நீக்க வேண்டும். 'நரகத்திற்கு' அஞ்சக் கூடாது. சோதிடர், குறிக்காரர், மந்திரவாதி முதலியவர்களைத் தண்டிக்க வேண்டும். சமஸ்கிருதத்தையொழித்து வேதங்களையும் புராணங் களையும் படிப்பதைத் தடுக்க வேண்டும். இப்போது நடைமுறையிலுள்ள மொழிகளை விருத்தி செய்து விஞ்ஞான அறிவையும் தொழில் ஞானத்தையும் பெருக்க வேண்டும். சோம்பேறிப் பாப்பானுக்குச் சோறு போடுவதைத் தடுத்து, வேலையற்றவருக்கு வேலை கொடுத்து, கிழவர்களுக்கு ஜீவனோபாயம் அளித்துக் காப்பாற்ற வேண்டும். ஒருவனே உழைப்பது என்பதை நீக்கி நாட்டின் வருவாயை நீதியாக அனைவருக்கும் பங்கிட வேண்டும். ஏகபோக உரிமைகளை யொழித்துத் தன்னாட்சி முறையில் கைத்தொழில்கள் தாராளமாக விருத்தியாக ஏற்ற சாதனம் ஏற்படும்படியான பொருளா தார நிலையையொட்டியே ஒரு திட்டம் நிறுவ வேண்டும்.**

**இதில் குறிப்பிடப்பட்டுள்ளவை மட்டும் போதுமான தென்று நான் சொல்லவில்லை. ஆனால் நம் முன் னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள முக்கியமான அம்சங்களை மட்டும் இங்குக் குறிப்பிட்டிருக்கிறோம். நம் முன்னேற்றத்திற்கு எத்தனை இடையூறுகள் வந்தாலும் அனைத்தையும் தடுத்து ஓங்கக் கூடிய தைரியமும் உறுதியுமுள்ள ஓர் அமைப்பை உண்டு பண்ணுவோமானால் தான் இச்செங்கற்பட்டு மகாநாட்டின் நோக்கம் பயன்பெற்றதாகும்.**

“குடிஅரசு” - “ரிவோல்ட்” தலையங்கம் -
மொழிபெயர்ப்பு, 17.02.1929

## நாற்பதாண்டுகளுக்குமுன் பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாகக் கொண்டாட மா.பெ.பொ.க. கோரிக்கை


THE THINKER 3—10—81

சிந்தனையாளன்

இந்திய நாடாளுமன்றத்தில்
பெரியார் 103ஆவது பிறந்த நாளை ஒட்டி,
சிறப்புச் செய்தி படிக்கப்பட்டது!

ஆண்டுதோறும், செப்டம்பர் 17ஆம் நாளை,
“சமூக நீதி நாள்” எனக் கொண்டாட அரசுக்கு வேண்டுகோள்

பெரியார் சமஉரிமைக் கழகம் படைத்த புதிய வரலாறு!

அவையின் துணைத்தலைவர் மாண்புமிகு திரு. ஜி. இலட்சுமணன் அவர்களின் அநுமதியின் பேரில், தோழர் ஜெய்பால் சிங் கஷ்யாப் எம். பி., 18—9—81 அன்று நாடாளுமன்றத்தில் படித்த செய்தி பின்வருமாறு:

**Jaipal Singh Kashyap ;**

Periyar E. V Ramasamy, the lion of Erode was born on 17th of September, 1879 For over 60 years between 1911 and 1973 he fought for establishing social justice by abolishing Varnashirama Dharma and for achieving equality through reservation in appointments and posts to the Backward classes, scheduled castes and tribes in proportion to their numerical strength in population.

He stood for equality among all men and also between men and women.

Periyar E. V. Ramasamy trod the paths of Lord Budha and Mahatma Phule. He was the contemporary of Baba Saheb, Dr. B. R. Ambedkar, Dr. R. M. Lohia and Shri Narayana Guru who, like him, strived for social Justice.

As a fitting memory to the great leader Periyar E. V. Ramasamy, whose 103rd birth day falls on 17th of Sepetember, 1981, the Government of India must come forward and issue orders declaring that 17th of September shouled be observed as "Social Justice Day" every year, throughout the country.

“ஈரோட்டுச் சிங்கம் பெரியார் ஈ. வெ. இராமசாமி ஈரோட்டில் 17—9—1879இல் பிறந்தார்.

அவர் வருணாசிரம தர்மத்தை ஒழித்து சமூக நீதியை நிலைநாட்டவும், பிற்படுத்தப்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் மலைச்சாதியினருக்கும் அவரவர் மக்கள் தொகை விகிதாசாரத்துக்கு ஏற்ப அரசு உத்தியோகங்களிலும் பதவிகளிலும் பங்கு கிடைக்கச் செய்வதன் மூலம் சமுதாயத்தில் சமத்துவத்தை நிலைநாட்டவும் 1911 முதல் 1973 முடிய 60 ஆண்டுகளுக்கு மேலாகப் போராடினார்.

மனிதர் அனைவரும் ஒரே நிறையானவர்கள்; ஆண்களும் பெண்களும் சமநிறையானவர்கள் என்பதை நிலைநாட்டப் பாடுபட்டார்.

பெரியார் ஈ. வெ. இராமசாமி பகவான் புத்தர், மகாத்மா புலே நெறிகளைப் பற்றிக் கொண்டார்.

அன்னாரைப் போன்றே சமூக நீதியை நிலைநாட்டப்பாடுபட்ட பாபா சாகேப், டாக்டர் அம்பேத்கார், ஸ்ரீ நாராயண குரு, டாக்டர் ஆர். எம். லோகியா ஆகியோருக்குச் சம காலத்தில் விளங்கியவர் அவர்.

இந்திய நாடாளுமன்றத்தில் பெரியார் 103ஆவது பிறந்தநாளை ஒட்டி, சிறப்புச் செய்தி படிக்கப்பட்டது. உ.பி. நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர் தோழர் ஜெய்பால் சிங் கஷ்யாப் 18.9.1981 அன்று நாடாளுமன்றத்தில் படித்த செய்தி பின்வருமாறு:

"Periyar E.V.Ramasamy, the lion of Erode was born on 17th of September, 1879. For over 60 years between 1911 and 1973 he fought for establishing social justice by abolishing Varnashrama Dharma and for achieving equality through reservation in appointments and posts to the Backward classes, scheduled castes and tribes in proportion to their numerical strength in population.“ He stood for equality among all men and also between men and women. Periyar E.V.Ramasamy trod the paths of Lord Budha and Mahatma Phule. He was the contemporary of Baba Saheb, Dr. B.R.Ambetkar, Dr.R.M.Lohia and Shri Narayana Guru who, like him, strived for Social Justice. “As a fitting memory to the great leader Periyar E.V.Ramsamy, whose 103rd birth day falls on 17th of September, 1981, the Government of India must come forward and issue orders declaring that the 17th September should be absorved as "Social Justice Day" every year, through the country."

மேற்கண்ட பெரியார் பிறந்த நாள் செய்தியை நாடாளுமன்ற நடைமுறை விதிகளின் கீழ்விதி 377இன்படி, நாடாளுமன்றத்தில் படித்திட பெரியார் பிறந்த நாளான 17.9.1981 அன்று பகல் 10 மணிக்கு, புதுதில்லி நாடாளுமன்ற இணையத்தில் ஜனநாயக சோசலிஸ்டுக் கட்சி அலுவலகத்தில் தோழர் ஜெய்பால்சிங் கஷ்யாப், என்னிடம் (தோழர் வே. ஆனைமுத்து) கூறினார். “உடனே மேற்கண்ட செய்தியுடன் **"to install his portrait in the Central Hall of the Parliament"** என்கிற கோரிக்கை அடங்கிய ஒரு விவர அறிக்கையை எழுதித் தந்தேன். படிக்க அனுமதி கோரி அன்றே நாடாளுமன்றத்தில் சேர்ப்பத்தார். “வழக்கமாக வெள்ளிக் கிழமைகளில் இது போன்ற செய்தி படிக்க அனுமதி இல்லை.“18.9.1981 பகல் 12.55 மணிக்கு தோழர் ஜெய்ப்பால் சிங் கஷ்யாப் செய்தியை நாடாளுமன்றத்தில் படித்தார்.

**– வே. ஆனைமுத்து, 19.9.1981,**
சிந்தனையாளன் 03.10.1981

# அனைத்து சாதியினர் அர்ச்சகர் சட்டம் ஒரு வரலாற்றுப் பார்வை

- வாலாசா வல்லவன்

கோயில் கருவறை நுழைவுப் போராட்டம் என்பது ஒரு ஐம்பது ஆண்டு வரலாற்றைக் கொண்டதாகும்.

பெரியார் அவர்கள் இதுதொடர்பாக பல கட்டுரை களை எழுதியும், சொற்பொழிவுகளை நிகழ்த்தியும் நமக்கு மான உணர்வை ஊட்டினார்.

"இந்துக்கள் என்கிற சமுதாயத்தில் பார்ப்பனர் அல்லாத மக்களாகிய நாம் எல்லோரும் "சூத்திரர்கள்", "கீழ்ப் பிறவியாளர்" என்று சட்டம், சாத்திரம் முதலிய வற்றில் குறிப்பிடப்பட்டிருப்பதோடு, "கோவில்கள் முதலிய வற்றின் மூலஸ்தானம், கர்ப்பகிரகம் என்பவற்றில் பிரவேசிக்கக் கூடாதவர்கள்" என்று இழிவுபடுத்தப்பட்டி ருக்கிறோம்...

ஆகவே தமிழ்நாட்டில் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் அல்லாத மக்களாகிய நம்மை இழிவுபடுத்தவும், கீழ்மைப்படுத்தவும் சட்டத்தின் மூலம் செய்து கொண்டி ருக்கிற ஏற்பாட்டை நாம் உடைத்தெறிய வேண்டியது நம் ஜீவிதக் கடமையாக இருக்கிறது" என்று எழுதினார்.

*(விடுதலை 13.10.1969)*

மேலும் கருவறை நுழைவுப் போராட்டம் குறித்துப் பெரியார் விளக்கம் அளித்துள்ளார்.

"சூத்திரர் என்கிற இழிவு நீக்கக் கிளர்ச்சி செய்வது என்பது சமுதாய சம்பந்தமான காரியமே தவிர, இதில் அரசியல் எதுவும் இல்லை. மற்றும் இதில் பலாத்காரம் என்பதும் இல்லை.

அதிலும் இந்த இழிவு நீக்கக் கிளர்ச்சி என்பது, உலகில் எங்குமே இல்லாத அக்கிரமக் கொடுமையில் இருந்து மனிதன் விடுதலை - மானம் பெற வேண்டும் என்பதற்கு ஆக நடத்தப்படும் கிளர்ச்சியாகும். இதில் எந்தவித வகுப்புத் துவேஷமோ, வகுப்பு வெறுப்போ இல்லை." *(விடுதலை 15.10.1969)*

**கருவறை நுழைவுப் போராட்டக் கிளர்ச்சிக்கு பெரியார் அழைப்பு**

"கிளர்ச்சி என்பது நமக்குப் புதிது அல்ல; சிறை செல்வதும் புதிதல்ல; சட்டம் கொளுத்தி, பிள்ளையார் சிலை உடைத்து, இராமன் படம் எரித்துப் பலமுறை சிறை சென்றிருக்கின்றோம். அதுபோல, சமுதாயத் துறையில் நாம் சாதித்திருக்கிறவை பல உண்டு.

நம் இழிவைப் போக்க நாம் பல கிளர்ச்சி செய்திருந்தாலும், இக்கிளர்ச்சி மிக முக்கியமானதாகும்.



இதில் நம் மக்கள் ஒவ்வொருவரும் பங்கேற்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒன்றும் பாடுபட வேண்டியதில்லை. வேப்பெண்ணெய்யைக் குடிக்க வேண்டியதில்லை. போய் நுழைய வேண்டியது, தடுத்தால் நின்றுவிட வேண்டியது; அவ்வளவுதான். இங்குள்ள உங்களிலேயும் வசதிப்பட்டவர்கள் நாங்கள் கிளர்ச்சியில் சேருகிறோம் என்று பெயர் கொடுத்து கலந்துகொள்ள வேண்டும். நமக்கிருக்கிற வேலை யெல்லாம் மந்திரியாக வேண்டுமென்பதோ, ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்பதோ அல்ல. கலெக்டராக வேண்டுமென்பதோ அல்ல. நம் சமுதாயத்திலிருக்கிற இழிவை ஒழிக்க வேண்டும் என்பதேயாகும்." (12.10.1969 அன்று திருச்சியில் தந்தை பெரியார் ஆற்றிய சொற்பொழிவு - விடுதலை 20.10.1969)

**கோயில் கருவறைக் கிளர்ச்சிக்குப் பெயர்களைக் கொடுக்குமாறு பெரியார் வேண்டுகோள்**

"தமிழர்களின் பிறவி இழிவு நீக்கக் கிளர்ச்சிக்கு அதாவது, கோயில்களில் "சூத்திரர் செல்லக்கூடாத இடம்", "கர்ப்பக்கிரகம்", "மூலஸ்தானம்" என்று பார்ப்பனர் அல்லாத இந்து மக்களுக்குத் தடுக்கப் பட்டிருக்கும் இடத்திற்குள் செல்லும் கிளர்ச்சியில் கலந்து கொள்ள இஷ்டமுள்ள ஆண், பெண் ஆகியோர் தயவுசெய்து உடனே தங்கள் பெயரை கையொப்பத்துடன் எனக்கு அனுப்பிக் கொடுக்க வேண்டுகிறேன்." (விடுதலை 10.10.1969)

16.11.1969-இல் திருச்சியில் நடைபெற்ற தி.க. மத்தியக் குழுக் கூட்டத்தில் 26.1.1970 அன்று கருவறை நுழைவுப் போராட்டம் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

அப்போதைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.01.1970 அன்று ''அனைத்து சாதியினரையும் அர்ச்சகர்களாக்கிட இந்த அரசு முயற்சி செய்யும். எனவே பெரியார் அவர்கள் போராட்டம் நடத்த வேண்டாம்'' என்று அறிக்கை வெளியிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, பெரியார் அவர்கள் 19.1.1970 அன்று கருவறை நுழைவுப் போராட்டக் கிளர்ச்சியை ஒத்தி வைத்தார்.

தமிழ்நாட்டு அரசின் சட்டமன்றத்தில் 30.11.1970 அன்று அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆக ஏற்ற வகையில் சட்ட முன்வடிவு முன்மொழியப்பட்டு, 2.12.1970 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சட்டமன்றத் தீர்மானத்தையொட்டி 1971ஆம் ஆண்டில் தமிழ்நாட்டு அரசு அனைத்து சாதியினரும் அர்ச்சகராக வருவதற்கு வழிவகைச் செய்யும் சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தது.

இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து 12 பேர் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர்.

அப்போதைய தலைமை நீதிபதியாக இருந்த எம்.எஸ். சிக்ரி தலைமையில் அய்ந்து நீதிபதிகள் அடங்கிய அமர்வு 14.3.1972 அன்று தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பில் ''பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழிக்கும் தமிழக அரசின் சட்டத்தை வரவேற்ற போதிலும், ஆகம விதிகளை மீறக் கூடாது; அப்படி மீறுவது இந்திய அரசியல் சட்டம் 25(1)-இல் அளிக்கப் பட்டுள்ள மத உரிமைகளுக்கு எதிரானது; எனவே இந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை பெரியார் வன்மை யாகக் கண்டித்தார். உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு ''ஆபரேஷன் வெற்றி; நோயாளி செத்தார்'' என்று விடுதலையில் 15, 16.03.1972-இல் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் அந்தத் தீர்ப்பை விமர்சனம் செய்து தலையங்கம் எழுதி இருந்தார்.

28.6.1972-இல் சென்னையில் திராவிடர் கழகம் சார்பில் சமூக இழிவு ஒழிப்பு மாநாட்டை பெரியார் நடத்தினார். அம்மாநாட்டில் நம்முடைய இழிநிலையை எடுத்துரைக்கும் தன்மையில், கோயில்களில் வழிபடு வதற்கு வரும் மக்களிடம் நம் இழித்தன்மையை விளக்கிக் கூறி, அவர்களுடைய அறியாமையை நீக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநாட்டின் தீர்மானத்தையொட்டி, 18.6.1972 மயிலை கபாலீசுவரர் கோயில் முன்பு கிளர்ச்சி செய்ய சென்ற திராவிடர் கழகத் தோழர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே பெரியார் கிளர்ச்சி ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.

தந்தை பெரியார் அவர்களின் இறுதி பிரச்சாரத்தில் பயணம் என்பதே இதை விளக்கி உரையாற்று வதற்கானதுதான். 18.11.1973 முதல் 28.11.1973 வரை எல்லா மாவட்டங்களுக்கும் தன்னுடன் தோழர் ஆனைமுத்து அவர்களை பெரியார் அழைத்துச் சென்றார். ஆனைமுத்து அவர்களின் விரிவான விளக்கச் சொற் பொழிவை செவிமடுத்த பெரியார் அவர்கள் 27.11.1973 அன்று சேலத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 'பேரறிஞர் ஆனைமுத்து' அவர்களே என்று விளித்தார்.

பெரியார் அவர்கள் 1973-ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் 8, 9 இரண்டு நாள்கள் 'இன இழிவு ஒழிப்பு மாநாடு' என்ற பெயரில் மாநாடு நடத்தினார். தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் இம்மாநாட்டில் பல சட்ட நூல்களை மேற்கோள்காட்டி இரண்டு மணிநேரம் உரையாற்றினார்.

1974 சனவரி 26-க்குள் இந்திய அரசு இன இழிவு ஒழிய வழிவகை காணாவிட்டால் மிகப்பெரிய கிளர்ச்சியை நடத்துவது என்று இம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

24.12.1973-இல் பெரியார் மறைவுற்றதையொட்டி அவர் அறிவித்த கிளர்ச்சி நடைபெறாமலே போய் விட்டது.''

அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கவேண்டும் என்று திராவிடர் கழகம் பல போராட்டங்களை நடத்தியதன் காரணமாக, 1979-இல் முதலமைச்சராக இருந்த எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், 24.9.1979-இல் ஓய்வுபெற்ற நீதிபதி மகராசன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கை 27.8.1982-இல் அரசிதழில் வெளியிடப்பட்டது. அதன் பரிந்துரைகள் :

1. இந்து சமயம் சிறப்பாக வளரும் பொருட்டு, இந்துக்களுக்குள் சாதி வேறுபாடின்றி தீவிரமான பயிற்சி அளித்துக் கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிப்பது, ஆகமத்திற்கு மாறுபட்டதாகும் என்று கருதுவதற்கு இடமில்லை.

2. அர்ச்சகராகத் தேர்ந்தெடுப்பவருக்கு

அ) அய்ந்தாண்டுகால தீவிரமான கல்விப் பயிற்சியும் செயல்முறைப் பயிற்சியும் அறநிலையத் துறையின் பொறுப்பில் அளிக்க வேண்டும்.

ஆ) பயிற்சி சம்பந்தமான சேர்க்கை விதிகள் பயிற்சி பாடத்திட்டம் - தேர்வுத் திட்டம் பாடப் புத்தகங்கள் முதலான அனைத்து காரியங்களையும் நிர்வகிப்பதற்கு அறநிலையத்துறை ஆகமச் சபை ஒன்றை நிறுவ வேண்டும்.

இ) இப்போது நடந்து வருகிற ஆகமப் பாடசாலைகள் அனைத்தையும் ஒரே தரமான நிலைக்குக் கொண்டு வரும் பொருட்டு, அங்குள்ள சேர்க்கை முறை, கல்வி முறை, தேர்வு முறை ஆகிய அனைத்து அம்சங்களையும் மேற்கூறிய ஆகமச் சபை நிர்வகித்து வரவேண்டும்.

ஈ) இப்போது பூசகராயுள்ளவர்களின் குடும்பங்களில் இருந்து வரும் மாணவர்களுக்கு ஆகமக் கல்லூரிச் சேர்க்கையில் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

உ) செயல் திட்டத்தில் கூறிய படி, வெற்றிகரமாகத் தேர்வை முடித்து வருகின்ற மாணவர்களுக்கு உடனே வேலைக்கும் தகுந்த ஊதியத்திற்கும் உறுதியளித்து, பிற எல்லா வசதிகளையும் செய்து தரவேண்டும்.

ஊ) செயல் திட்டத்தில் கூறியுள்ளபடி, அறநிலையத் துறை ஆகம நூல்களை உரையோடு வெளியிட்டு, மாணாக்கர்களுக்குத் தேவையான புத்தகங்களையும் அச்சிட்டுத் தரவேண்டும்.

3. நெடுங்காலமாக சிவாச்சாரியாரும், பட்டாச்சாரியாரும் செய்துவந்த கோயில் பணிகளை இன்று நாம் நினைவுகூராமல் இருக்க முடியாது. இந்த சமயப் பண்பாட்டு நிலைகளை அரசு கருத்தில் கொண்டு, பூசகர் சுமாரான வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய வாழ்க்கை வசதியும், தொழிலுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு உண்டு என்ற உறுதியும், சமூகத்தில் போதிய அந்தஸ்தும் குறைந்த அளவிலேனும் அரசு செய்து தரவேண்டும்.

4. தமிழில் அர்ச்சனை செய்வது ஆகமத்துக்கு உடன்பாடே. ஆதலால், தமிழ் அர்ச்சனைப் பயிற்சியைக் கல்லூரிகளில் பாடத் திட்டத்தின் பகுதியாகச் செயல்படுத்துவதோடு கூட, அத்தலைப்பில் சொல்லப்பட்டபடி அஷ்டோத்திரம், சகஸ்ரநாமம் முதலியவற்றைத் தயாரித்து வெளியிட்டு, கோயில்களில் கடைபிடிக்க செய்ய வேண்டும்.

5. உள்துறை ஊழியர்களைப் பொறுத்தவரையில் முக்கியமாகப் பாசகர், பரிசாரகர் என்ற நிலையில் பணிபுரிபவர்களை அவர்களுடைய பண்பாடு, பக்தி, ஆசாரம் இவற்றை அனுசரித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகமத்தில் சொல்லியபடி இவர்களுக்கும் தீட்சை அளிப்பது அவசியம்.

மகராசன் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர் ஆக்குவதற்கு உரிய வழிமுறைகள் வகுத்து அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 12 பேர் கொண்ட வல்லுநர் குழு ஒன்றை ஓய்வு பெற்ற நீதிபதி என். கிருட்டிணசாமி ரெட்டியார் தலைமையில் 2.6.1984-இல் தமிழக அரசு அமைத்தது. மூன்று மாதத்தில் அக்குழு சில பரிந்துரைகளை அரசுக்கு வழங்கியது.

தமிழ்நாட்டில் அய்ந்து இடங்களில் அர்ச்சகர் பயிற்சிக் கூடங்களை நிறுவிட வேண்டும் என்றும் அர்ச்சகர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய் வழங்க வேண்டும் என்றும் அக்குழுவும் பரிந்துரை செய்தது.

அ.தி.மு.க. ஆட்சியில் இதற்கான முயற்சிகள் எதையும் செய்யவில்லை.

தி.மு.க. ஆட்சியில் மீண்டும் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்கும் சட்டத்தை நீதிபதி மகராசன் குழு பரிந்துரையின்படியும், தமிழ்நாட்டு அரசுக்கு வழிகாட்டுவதற்காக நீதிபதி ஏ.கே. இராசன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு, தமிழக அரசுக்கு அளித்த சில பரிந்துரைகளின் அடிப்படையிலும் 23.5.2006-இல் சட்டம் இயற்றியது. இச்சட்டத்தை எதிர்த்தும் உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப் பட்டது. 9 ஆண்டுகள் கழித்து 16.12.2015-இல் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பும் ஆகம விதிகள் மீறப்பட்டதாகக் கூறி அந்த சட்டத்தையும் செல்லாததாக ஆக்கிவிட்டது.

தமிழ்நாட்டு அரசின் ஆகமப் பள்ளியில் படித்த 206 பேர் கோயில்களில் பணியமர்த்தம் செய்யப் படாமல் 13 ஆண்டுகள் காத்திருந்தனர்.

2021 ஏப்ரலில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலுக்கான தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் அறிவித்திருந்தபடி, ஆட்சிக்கு வந்த 100-ஆவது நாளில் 14.8.2021 அன்று மயிலாப்பூர் கபாலிசுவரர் கோயிலுக்குச் சொந்தமான கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் பேரூர் ஆதினம், குன்றக்குடி அடிகளார் முன்னிலையில் அந்த விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 58 கோயில் பணியாளர்களுக்குப் பணி ஆணையை வழங்கினார். அதில் 24 பேர் தமிழ்நாட்டு அரசின் ஆகமப் பள்ளிகளில் 1½ ஆண்டுகள் படித்து முடித்தவர்கள். இந்த 24 பேரில்,

| | | |
|---|---|---|
| பட்டியல் பிரிவினர் | - | 5 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் | - | 6 |
| பிற்படுத்தப்பட்டவர்கள் | - | 12 |
| பெண் (ஓதுவார்) | - | 1 |

ஆவர். தந்தை பெரியார் அவர்கள் 24.2.1973-இல் மறைந்த போது அன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள் ''பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை நீக்கப் படாமலே அவரை அடக்கம் செய்கின்றோம்'' என்று வேதனைப்பட்டார். அந்த வேதனையை அவருடைய மகன் தமிழக முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் நீக்கினார். திராவிடர் இயக்கத்தின் அய்ம்பதாண்டுக் காலக் கனவை நனவாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களை மனதாரப் பாராட்டுகிறோம். ●

# உளவு பார்ப்பது நாட்டு விரோதச் செயலா?

குட்டுவன்

உளவு பார்ப்பது ஜனநாயகத்தில் தெரிந்தோ தெரியாமலோ ஆளும் கட்சியால் செய்யப்படுகிறது. ஆனால் அதற்கு ஒரு எல்லை உண்டு. ஒரு நாட்டினுடைய பாதுகாப்பு இரகசியங்களை வெளிப்படுத்துவது அல்லது விலைக்கு விற்பது ஒரு நாட்டு விரோத நடவடிக்கையாக உள்ளது. இந்தச் செயலில் யார் ஈடுபடுகிறார் என்பதை உளவுத் துறை வழியாக அரசுக் கண்காணிக்கிறது. கூட்டாட்சி நாடுகளில் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் தங்களுக்கென்று வகுக்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் உளவுத் துறையைப் பயன்படுத்தி நாட்டுப் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் தனிநபர்களைக், குழுக்களை அல்லது அரசியல் சார்புடைய நபர்களைக் கண்காணிக்கிறார்கள்.

அதே போன்று இராணுவ உயர் அலுவலர் களையும் கண்காணிப்பதற்கென்று தனித்தனி உளவுப் பிரிவுகள் உலகம் முழுவதும் இயங்கி வருகின்றன. அமெரிக்காவில் உள்நாட்டுப் பாதுகாப் பினை ஒட்டி கமுக்கமாகக் கண்காணிக்க (Federal Bureau of Investigation) ஒன்றிய அரசின் துப்பறியும் மையம் செயல்படுகிறது. பாதுகாப்புக் காரணங்களைச் சுட்டிக்காட்டி வெளிநாட்டினரை வெளிநாடுகளில் கண்காணிப்பதற்கு அமெரிக்க உளவுத் துறை (Central Intellegence Agency) அமைக்கப்பட்டது. இத்துறை யின் மீது பல காலக்கட்டங்களில் மனித உரிமை மீறல்களைச் செய்வதாக பல குற்றச்சாட்டுகள் எழுந்து வருகின்றன.

சோவியத் ஒன்றியம் இருக்கும் போது நாட்டுப் பாதுகாப்புக் குழு (KGB) அமைக்கப்பட்டு 1991க்குப் பிறகு கலைக்கப்பட்டது. சோவியத் ஒன்றியம் பல நாடுகளாகப் பிளவுபட்ட பிறகு ரஷ்யாவின் வெளிநாட்டு உளவுத் துறையாக மாற்றப்பட்டது. இரஷ்யாவின் பாதுகாப்புக் காரணங்களுக்கு இந்த அமைப்பு யார் எதிரிகள் எனக் கருதுகிறார்களோ அவர்களைக் கமுக்கமாகக் கண் காணித்து அரசுக்கு அறிக்கைகளை அளித்து வருகிறது. இருப்பினும் 1991ஆம் ஆண்டிற்கு முன்பு இயங்கி வந்த நாட்டுப் பாதுகாப்பு அமைப்பின் மீதும் தற்போது உள்ள வெளிநாட்டுக் கண்காணிக்கும் மையத்தின் மீதும் பல மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுகின்றன. 2016ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்கக் குடியரசுத் தலைவர் தேர்தலில் டிரம்பிற்கு ஆதரவாகவும் ஹிலாரி கிளின்டனுக்கு எதிராகவும் ரஷ்யாவின் உளவுத் துறை செயல்பட்டது என 2018இல் குற்றம் சாட்டப்பட்டு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது. தக்கச் சான்றுகளுடன் மெய்ப்பிக்க முடியாத காரணத்தினால் அந்தக் குற்றச்சாட்டுகள் இன்றும் அமெரிக்க அரசியலில் மீண்டும் பேசப்பட்டு வருகிறது.




உளவுத் துறை என்பது ஒவ்வொரு நாட்டினுடைய உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்புப் பணிகளைக் கடந்து மற்ற நாடுகளின் அரசியல் கண்காணிப்பில் ஈடுபடுவதை மனித உரிமை செயல்பாட்டாளர்கள் அவ்வப்போது கண்டித்து வருகின்றனர். இவ்வாறாக ஐரோப்பிய நாடுகளிலும் ஆசிய நாடுகளிலும் பல்வேறு பெயர்களில் உளவுத் துறை அமைப்புகள் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் தேசிய புலனாய்வு முகமை (National Investigation Agency), வெளிநாட்டுப் பகைவர்களை, பயங்கரவாதிகளைக் கண்காணிக்கக் காவல் துறை உயர் அதிகாரிகளைக் கொண்ட ‘ரா’ என அழைக்கப்படுகிற ஆய்வுக் கண்காணிப்பு மையம் (Research and Analysis Wing) புலனாய்வு நிறுவனம் (Intelligence Bureau) இராணுவப் புலனாய்வு மையம் (Military Intelligence) ஒன்றிய அரசின் புலனாய்வு நிறுவனம் (Central Bureau of Investigation) எனப் பல காவல் துறை புலனாய்வு அமைப்புகள் ஒன்றிய அரசின் நேரடி அதிகார வரம்பிற்குள் இயங்கி வருகின்றன.

இத்தகைய உளவுத் துறை அமைப்புகள் இருப்பினும் இதையும் கடந்து இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த இணைய ஆயுதச் செயலி நிறுவனத்தின் பெகாசஸ் என்ற செயலியைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகள், ஊடகவிய லாளர்கள், நீதிபதிகள், ஒன்றிய அரசின் அமைச்சர்கள் ஆகியோர்களின் கைப்பேசி வழியாக உளவு பார்க்கும் நோக்கத்தோடு ஒன்றிய அரசுத் தகவல்களைத் திரட்டியுள்ளதாக எதிர்க்கட்சிகள் மோடி அரசு மீது குற்றம் சாட்டுகின்றன.

உலகளவில் எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நோக்கத்தோடு செயல்படும் உளவு அமைப்புகள் மீது தொடர்ந்து ஜனநாயகப் பாதுகாவலர்களும் மனித உரிமைச் செயல்பாட்டாளர்களும் குற்றம் சாட்டி வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மை என்பதை உலகிற்கு முதன்முதலில் வெளிக்கொண்டு வந்தது அமெரிக்காவில் 1972இல் நடைபெற்ற வாட்டர்கேட் ஊழல் (Watergate) ஆகும். 1972இல் அமெரிக்கக் குடியரசுத் தலைவராக நிக்சன் இருந்த போது நடைபெற்ற இந்த ஜனநாயக விரோத உளவு பார்க்கும் செயலைத்தான் இவ்வாறு அழைத்தார்கள். குடியரசுத் தலைவர் நிக்சன் தன்னுடைய சுயநலத்திற்காக எதிர்க்கட்சிகள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொலைப்பேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்டுப் பதிவு செய்து உளவு பார்த்தது வெளியுலகிற்குத் தெரிய வந்தது. இதன் அடிப்படையில் அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் உறுப்பினர்கள் கொண்ட குழு ஒரு நீதித்துறை விசாரணையை மேற்கொண்டது. இந்தக் குற்றச்சாட்டு உண்மை எனத் தெரிந்தவுடன் அமெரிக்கக் குடியரசுத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்கும் தீர்மானத்தை அமெரிக்க நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் முன்மொழியப்பட்டது. பதவி நீக்க நடவடிக்கை தொடங்குவதற்கு முன்பே நிக்சன் 1974 ஆகஸ்ட் 9ஆம் நாள் அன்று பதவி விலகினார். இருப்பினும் உளவுப் பார்ப்பதற்கு உதவிய அதிகாரிகளில் பலர் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். உள்நாட்டு உளவுத் துறை செய்த தவறுக்கே குடியரசுத் தலைவர் நிக்சன் பதவி விலகும் சூழல் ஏற்பட்டதற்குக் காரணம், அரசியல் கட்சிகள் கடந்து நாட்டினுடைய ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைவரும் ஒன்றிணைந்து போராடினர்; வெற்றி பெற்றனர்.

இந்தியாவில் அஞ்சல் துறை திருத்தச்சட்டம் 1986ஆம் ஆண்டு பிரதமர் ராஜிவ் காந்தியால் கொண்டு வரப்பட்டது. இந்தச் சட்டம் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் மடல்களைப் பிரித்துப் பார்க்கும் உரிமையை உளவுத் துறைக்கு வழங்கியதனால் இதனை எதிர்க்கட்சிகள் கடுமையான முறையில் நாடாளுமன்றத்தில் எதிர்த்தனர். அப்போது இச்சட்டம் குடியரசுத் தலைவராக இருந்த ஜெயில் சிங் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அவர் இச்சட்டத்திற்கு ஒப்புதல் வழங்க விரும்பவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றாலும் மீண்டும் அதே சட்டத்தை நிறைவேற்றினால் அது சட்டத் தகுதியைப் பெற்றுவிடும். இதை நன்கு அறிந்த குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் கிடப்பில் போட்டுவிட்டார். இச்சட்டத்தைத் திருப்பி அனுப்பாத காரணத்தினால் மீண்டும் நாடாளுமன்ற இரு அவைகளில் நிறைவேற்ற முடியவில்லை. எனவே அந்தச் சட்டத்தைக் கொண்டுவர முடியவில்லை. இத்தகைய அதிகாரத்தைச் சட்டைப்பை (Pocket Veto) சிறப்பு அதிகாரம் என அழைக்கிறார்கள். இது இந்திய ஜனநாயகத்தின் ஒரு மைல்கல்லாகக் கருதப்படுகிறது. 1990ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த வி.பி. சிங் இச்சட்டத்தை நாடாளுமன்ற இரு அவைகளிலும் திரும்பப் பெற்று மக்களாட்சியின் மாண்பை உயர்த்தினார்.

மாநிலக் காவல் துறையின் உளவுப் பிரிவு வழியாக எதிர்க்கட்சிகளின் தொலைப்பேசிகளை ஒட்டுக்கேட்டு உளவு பார்த்த குற்றச்சாட்டின்மீது கர்நாடக முதல் அமைச்சராக இருந்த இராமகிருஷ்ண ஹெக்டே 1988ஆம் ஆண்டு பதவி விலகினார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளின் பல பிரிவுகளில் தனிநபர் சுதந்திரமும், தனிநபர் கண்ணியமும் பாதுகாக்கப்பட்டுள்ளன. குறிப்பாக வாழும் உரிமை, சுதந்திர உரிமை, தனிநபர் உரிமைகளோடு இணைந்தவைகளாகும். 2017இல் உச்ச நீதிமன்றத்தின் 9 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு இந்திய அரசமைப்புச் சட்டத்தினுடைய பகுதி 3-இல் குறிப்பிட்டுள்ளபடி தனிநபர் சுதந்திரம் பாதுகாக்கப் படுகிறது எனக் குறிப்பிட்டது. ஆதார் அட்டையைக் குடிமக்களுக்கு வழங்கும் திட்டத்திற்கு எதிராகப் போடப்பட்ட வழக்கில்தான் இந்தத் தீர்ப்பு வழங்கப் பட்டது. குறிப்பாக எல்லாத் தனிநபர்களுடைய தகவல்களையும் பாதுகாப்பது அரசினுடைய கடமையாகும். அந்தத் தனிநபர் பாதுகாப்பிற்குத் தீமை ஏற்படுவதைத் தடுக்கும் பொறுப்பு அரசிற்கு உள்ளது எனவும் சுட்டியுள்ளது. இந்த அரசமைப்புச் சட்ட வழக்கின் தீர்ப்பு, பல பாதுகாப்பு உறுதிகளைத் தனி நபர்களுக்கு வழங்குகிறது. ஆதார் அட்டையின் வழியாகத் தனிநபர் தகவல்களை எடுக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஒன்றிய அரசு பல நலத்திட்டங்களை வழங்குவதற்காக கொண்டு வரப்பட்ட ஆதார் அட்டை மற்றவர்களுக்குத் தகவல் அளிக்கும் கருவியாக மாறிவிடக்கூடாது என்ற எச்சரிக்கை இந்தத் தீர்ப்பில் எதிரொலித்துள்ளது.

இதே போன்று இந்தியா, ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை அறிக்கையை (1948) ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்த உறுதி பூண்டு கையொப்பமிட்ட நாடுகளில் இந்தியா முதன்மையான நாடாகும். ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆவணத்தில் 30 பிரிவுகள் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக பிரிவு 3இல் - ஒவ்வொரு குடிமகனும் தனிநபர் சுதந்திரத்தோடு வாழப் பாதுகாப்பு உரிமை உள்ளது. பிரிவு 7இல் - எல்லோரும் சட்டத்திற்கு முன், எவ்வித பாகுபாடு இன்றி, சமமானவராகக் கருதப்பட வேண்டும். பிரிவு 8இல் -

அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்ற நேரத்தில் தீர்ப்பாயங்களையும் நீதிமன்றங்களையும் பாதிக்கப்பட்ட நபர் அணுகித் தீர்வு காணும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

1950இல் உருவாக்கப்பட்ட அரசமைப்புச் சட்டத்தில், மனித உரிமை ஆணையத்தின் அடிப்படை உரிமைகளின் சட்டப்பிரிவுகளை அப்படியே ஏற்றுக் கொண்டுள்ளது. இத்தகையப் பின்னணியோடும் ஏற்கெனவே குடியரசுத் தலைவர் ஜெயில் சிங் எடுத்த நடவடிக்கையின் அடிப்படையிலும் இராமகிருஷ்ண ஹெக்டே பதவி விலகல் அடிப்படையிலும் இஸ்ரேலின் இணையச் செயலி வழியாக எதிர்க்கட்சிகளை அமைச்சர்களை, ஊடகத் துறையினரை உளவு பார்த்தது ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமை மாண்புகளையும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளையும் அப்பட்டமாக மீறிய கொடுஞ்செயலாகும். இந்திய ஜனநாயகத்தின் மீதும் மனித உரிமைகள் மீதும் நாட்டின் பாதுகாப்பின் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

மேற்குவங்க முதல் அமைச்சர் மம்தா பானர்ஜி, இஸ்ரேல் இணையச் செயலி வழியாக உளவு பார்த்த விவகாரத்தில், மாநில அரசின் சார்பில் ஒரு விசாரணையை அறிவித்துள்ளார். இந்த விசாரணை ஆணையத்தின் தலைவராக உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி மதன் லோகோரும் கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி ஜோதிர்மயி பட்டாச்சாரியாவும் உறுப்பினராகவும் உள்ளனர். இந்த இரு நபர் விசாரணை ஆணையம் கூட்டாட்சி இயலையும், ஜனநாயகத்தையும் போற்றும் செயல் எனப் பலர் பாராட்டி உள்ளனர். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரமணா அவர்கள் “வெளி வருகின்ற செய்திகள் உண்மையாக இருப்பின், இந்தக் குற்றச்சாட்டுகள் கடுமையானவை என்பதில் சிறிதும் ஐயமில்லை (No doubt, the allegations are serious, if the reports are true)” என்று குறிப்பிட்டுள்ளார் பெகாசஸ் இணையச் செயலி வழியாகப் பல்வேறு துறைகளைச் சார்ந்த 142 ஆளுமைகளின் கைப்பேசிகளை ஒட்டுக் கேட்ட ஜனநாயக விரோதச் செயலை எதிர்த்து, மூத்த இதழியலாளர்களான இந்து என். ராம், சசிகுமார் ஆகியோர் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்குப் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த பெகாசஸ் ஒட்டுக் கேட்பு நிகழ்வில் அதிர்ச்சி தரும் தகவல் ஒன்று வெளியாகி உள்ளது. அறிவியல் அறிஞரும் நச்சு உயிரியல் ஆய்வாளருமான திருமதி. ககன்டீப் கங் அவர்களுடைய பெயரும் இந்த ஒட்டுக் கேட்கப்பட்ட நபர்களின் வரிசையில் இடம் பெற்றுள்ளது. இந்த நச்சு உயிரியல் ஆய்வாளர் கொரானா தொற்று பாதிப்பு உச்சக்கட்டத்தை இந்தியா அடைந்த போது, ஒன்றிய அரசு செய்யத் தவறிய காரணிகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். ஒரு கொடும் நோய்த் தாக்குதலின் போது உண்மையான வெளிப்படையான கருத்துகளை வெளியிட்டார் என்ற காரணத்திற்காகவே, இவரது கைப்பேசியும் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, ககன்டீப் கங் அவர்களை இந்தியா டுடே நாளிதழ் பேட்டி கண்டபோது. “சர்ச்சைக்குரிய கருத்து எதையும் நான் வெளியிடவில்லையே” எனக் குறிப்பிட் டுள்ளார். இது போன்ற அதிர்ச்சி தரும் கருத்துகள் வெளி வந்த வண்ணமே உள்ளன. கொரானா தொற்றின் பாதிப்பு முழுமையாக விடுபடாத நேரத்தில் ஒன்றிய அரசு மூடநம்பிக்கை சார்ந்த மத ஊர்வலங்களை அனுமதித்தது உட்படப் பல தவறான செயல்களை ஊக்குவித்து வருகிறது. இதற்கும் உச்ச நீதிமன்றம்தான் தலையிட்டுத் தடைசெய்து, நோய்த் தொற்று பாதிப்பிலிருந்து மக்களைப் பாதுகாத்தது. பொருளாதாரம் சரிகிறது. வேலையின்மை பல கோடி அளவிற்குப் பெருகி வருகிறது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோர் எண்ணிக்கை வளர்ந்து வருகிறது; விலைவாசி உயர்ந்து வருகிறது; எரிபொருள் விலையேற்றம் தொடர்கிறது; இதைப் பற்றிக் கவனம் செலுத்தித் தீவிரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய அரசு, தனது சுய நல அரசியலுக்காக, எல்லா வற்றையும் இழந்து உண்மையைச் சுட்டிக்காட்டு பவர்களின் கைப்பேசிகளை ஒட்டுக் கேட்பது என்பது முற்றிலும் நாட்டு விரோதச் செயலே ஆகும்.

●

## திருமதி. மலர்விழி சந்திரசேகரன் இயற்கையானார்



**வேலூர் உதவும் உள்ளங்கள் நிறுவனர் தோழர் இரா. சந்திரசேகரன் அவர்களின் துணைவியாரும் வழக்குரைஞர் ச. கபிலன் அவர்களின் தாயுமான திருமதி. மலர்விழி அவர்கள் கொரோனா தாக்கத்தால் நறுவி மருத்துவ மனையில் 6.5.2021 அன்று காலை மறைந்தார். எதிர்பாரா அதிர்ச்சி செய்தி. குடும்பத்தார்க்கு சிந்தனையாளன் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

தொடர்புக்கு
**இரா. சந்திரசேகரன்**
94435 74361
**ச. கபிலன்**
94436 26009

# சீனமக்கள் தொகையும்
# அப்போல்லோ மருத்துவமனை வாகன நிறுத்தமும்

இராமியா

தலைப்பைப் பார்த்த உடன் "மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட்டாலும் போட்டு விடலாம்; ஆனால் சீனமக்கள் தொகைக்கும் அப்போல்லோ மருத்துவமனையின் வாகன நிறுத்தத்துக்கும் தொடர்பு ஏற்படுத்த முடியாதே?" என்று யாருக்குமே தோன்றும். உண்மையில் இரண்டுக்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லைதான். ஆனால் இரண்டுக்குமான கொள்கை முடிவில் முதலாளித்துவ உற்பத்தி முறை ஒரு தவறான போக்கை வற்புறுத்துவதைக் காணலாம்.

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட சீனா, சோஷலிசப் பாதையில் சென்று கொண்டு இருந்தபோது, அதைக் குறைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் "நாம் இருவர்; நமக்கு இருவர்" என்ற கொள்கையை, பெரு நகரங்களைத் தவிர நாட்டின் மற்ற பகுதிகளுக்கும், பெரு நகரங்களில் "நாம்இருவர்; நமக்கு ஒருவர்" என்ற கொள்கையையும் உறுதியாகக் கடைப்பிடித்தது. ஆனால் சோஷலிசப் பாதையைவிட்டு முதலாளித்துவப் பாதை யில் சறுக்கி விழுந்தபின் அங்கு இருந்த - இருக்கும் முதலாளித்துவ அறிஞர்கள் "நாம் இருவர்; நமக்கு இருவர் கொள்கை நல்ல கொள்கைதான்; ஆனால் அதைக் கட்டாயம் ஆக்கித் தனிமனித சுதந்திரத்தை நசுக்கக் கூடாது" என்று பேசத் தொடங்கினார்கள். இதன் தொடர்ச்சியாக ஒரு இணையர் மூன்றாவது குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சீன அரசு அண்மையில் கொள்கை முடிவு எடுத்து உள்ளது.

என்னது? "தனிமனித சுதந்திரத்தை நசுக்கக்கூடாது" என்று முதலாளித்துவ அறிஞர்கள் சொன்ன ஒற்றை வாக்கியத்தை ஏற்றுக்கொண்டு, சீன அரசு இவ்வாறு முடிவு எடுத்துவிட்டதா? நிச்சயமாக இல்லை. "நாம் இருவர்; நமக்கு இருவர்" மற்றும் "நாம் இருவர் நமக்கு ஒருவர்" என்ற கொள்கையின்படியே சென்று கொண்டு இருந்தால், சில பத்தாண்டுகளுக்குப் பின் மூத்த குடி மக்களின் அதாவது உழைக்க முடியாதவர்களின்) எண்ணிக்கை ஒப்பீட்டு அளவில் மிகவும் அதிகமாக ஆகிவிடும் என்றும், உழைக்கும் வயது உள்ள இளைஞர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டு அளவில் குறைத்துவிடும் என்றும் அவர்கள் கூறினர். இதனால் மூத்த குடிமக்களைப் பராமரிக்கும் பொறுப்பின் அளவை இளைஞர்கள் ஒப்பீட்டு அளவில் மிகுதியாகச் சுமக்க நேரிடும் என்றும் அவர்கள் கூறினர். இதைத் தவிர்த்து, சமூக இயக்கம் "சீராக" இயங்கவேண்டும் என்றால் அதிக குழந்தைகளைப் பெறுவதைத் தடுக்கக் கூடாது என்றும் அவர்கள் அறிவுரைக் கூறினர்.

அதுசரி! சீனா சோஷலிசப் பாதையில் சென்று இருந்தாலும், இதே நிலைமை தானே இருந்திருக்கும்? அப்பொழுது ஏன் இத்தகைய சிந்தனை தோன்றவில்லை? சோஷலிச முறை மக்களை "அடக்கி" ஆள்வதால் இவ்வாறு சிந்திக்க முடியாமல் போய்விட்டதா? பிரச்சினை ஏற்பட்டபின் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்று இருப்பார்களா?

நிச்சயமாக இல்லை. சோஷலிச உற்பத்தி முறைக்கும் முதலாளித்துவ உற்பத்தி முறைக்கும் இடையே உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொண்டால்தான் இரண்டு கொள்கை முடிவுகளுக்கும் இடையே உள்ள வேறு பாட்டையும் புரிந்து கொள்ளமுடியும்.

சோஷலிச முறையில் மக்களின் தேவைகளைக் கணக்கிட்டு அவை உற்பத்தி செய்யப்படும். மக்கள் திரளில் குழந்தைகளின் எண்ணிக்கை, பதின்மர்களின் (teen agers) எண்ணிக்கை, இளைஞர்களின் எண்ணிக்கை, நடுவயதினரின் எண்ணிக்கை, மூத்த குடிமக்களின் எண்ணிக்கை, முதுமூத்தகுடி மக்களின் (super senior senior citzens) எண்ணிக்கை ஆகியவற்றையும், அவர்கள் குடியிருக்கும் நிலப்பகுதியில் உள்ள பழக்க வழக்கங்கள், அவர்களின் உணவுப்பழக்கம், உடைப் பழக்கம் போன்று வெவ்வேறு பழக்கவழக்கங்களைக் கொண்டு, மொத்தத் தேவைகள் கணக்கிடப்படும். அந்தத் தேவைகளை உற்பத்தி செய்யவும் விநியோகம் செய்யவும் தேவையான மனிதவளம் கணக்கிடப்படும். அதன்பின் இருப்பில் உள்ள உழைக்கும் ஆற்றல் கொண்ட அனைத்து மக்களுக்கும் அவ்வேலைகள் அவரவர் திறமைக்கு ஏற்ப, பிரித்து அளிக்கப்படும். உழைக்கும் ஆற்றல் உள்ளவர்கள் உழைக்கும் நிலைக்கு வளராத தங்கள் குழந்தைகளின் தேவைகளையும், ஏற்கனவே தங்களுக்காக உழைத்துக் களைத்து ஓய்வில் இருக்கும் தந்தைமார், பாட்டன்மார் களின் தேவைகளையும் உற்பத்தி செய்வார்கள்; விநியோகம் செய்வார்கள். இந்த உற்பத்தி முறையில் யாருக்கு எவ்வளவு ஆதாயம் (இலாபம்) என்ற பேச்சுக்கே இடம் இருக்காது. அவரவர் உழைத்த அளவுக்குக் கூலி கிடைக்கும். தேவைகளைக் கணக்கிட்டு உற்பத்தி செய்வதால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் விற்பனை ஆகுமா அல்லது வீணாகி இழப்பு (நஷ்டம்) ஏற்பட்டுவிடுமா என்ற அச்சத்திற்கு இடம் இல்லை. தொடக்கத்தில் தேவைகளைக் கணக்கிடு வதில் பிழை ஏற்படலாம். ஆனால் பட்டறிவு (அனுபவம்) காலப்போக்கில் அதைப் பெருமளவு குறைத்துவிடும். தொழில் புரட்சி தந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியைக் கணக்கில் கொண்டு பார்க்கும் பொழுது, உழைக்கும் மக்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் எந்த விகிதத்தில் இருந்தாலும் அனைத்து மக்களின் தேவைகளையும் எளிதாக உற்பத்தி, விநியோகம் செய்ய முடியும். ஆகவே, சீனா சோஷலிசப் பாதையில் நடைபோடும் வரை மக்கள் தொகையில் எந்த

வயதினரின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும்; எந்த வயதினரின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் என்பதைப் பற்றிக் கவலைப் படவில்லை. அதிக மக்கள் தொகை அதிகமான அளவில் பூமியைப் பிழிந்து எடுக்கும்; அதைத் தவிர்க்க மக்கள் தொகையைக் குறைப்பதே சரி என்ற வழியில் கொள்கையை வகுத்தது.

ஆனால் சீனா முதலாளித்துவப் பாதையில் சறுக்கி விழுந்த பின் நிலைமை என்ன? அதற்கு முதலாளித்துவப் பொருளாதார முறையைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலாளித்துவப் பொருளாதார முறையில் மக்களுக்கு என்ன தேவைப்படும் என்பதைப் பற்றி அதிகார வர்க்கம் கவலையேபடாது. எந்தெந்தப் பண்டங்களை இலாபகமாக, அதிக இலாபகரமாக, இன்னும் அதிக இலாபகரமாக விற்க முடியுமோ அவை மட்டுமே உற்பத்தி செய்யப்படும். பல சமயங்களில் மக்களுக்கு எந்த விதத்திலும் பயன் தராத பண்டங்கள் அதிக இலாபம் தரும் என்ற ஒரே காரணத்திற்காக அவை சந்தையில் திணிக்கப்படும். எடுத்துக்காட்டாக, போர் ஆயுதங்களால் மக்களுக்கு எந்தவிதமான நன்மையும் இல்லை என்பது மட்டும் அல்ல; அவை மக்களுக்குப் பெரும் தீங்கு விளைவிப்பவை. மக்கள் அவற்றை மிகவும் வெறுக் கின்றனர். ஆனால் மிகுந்த இலாபம் தரும் என்பதற்காக அவை வலுவில் உற்பத்தி செய்யப்படும்; சந்தையில் வலுக்கட்டாயமாகத் திணிக்கப்படும்.

அது ஒருபுறம் இருக்கட்டும். மூன்றாவது குழந்தை பெறலாம் என்ற கொள்கை முடிவுக்கு முதலாளித்துவ உற்பத்தி முறை துரத்தியது எப்படி என்று பார்ப்பேம். ஒரு இணையர் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன் நிறுத்திக் கொண்டால், சில பத்தாண்டுகளுக்குப் பின் மூத்த குடி மக்கள் மற்றும் முதுமூத்த குடிமக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கும் என்று கணக்கிட்ட முதலாளித்துவ அறிஞர்கள் அந்த நேரத்தில் முதியவர்களின் தேவைக்கான பண்டங்களை மிக அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டி இருக்கும் என்றும், தவறினால் சமூக அமைதியின்மை ஏற்படும் என்பதையும் புரிந்து கொண்டார்கள். அதற்காக மனிதவளத்தின் பெரும் பகுதியை அப்பண்டங்களை உற்பத்தி செய்யும் பணிக்குத் திருப்பிவிட வேண்டி இருக்கும். அப்பண்டங்களின் மூலம் அதிகமான இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. பெரும் எண்ணிக்கையிலான உழைக்கும் மக்களை முதியவர்களின் தேவைக்கான பண்ட உற்பத்தியில் ஈடுபடுத்தினால், அதிக இலாபம் தரும் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடக் கூடிய தொழிலாளர்களின் எண்ணிக்கை போதுமான அளவில் கிடைக்காமல் போய்விடும். இது அப்பண்டங்களின் உற்பத்திக் குறைவிலும், தொழிலாளர்களின் கூலிஉயர்விலும், இறுதியாக இலாப விகிதம் குறைவதிலும் முடியும். முதலாளிகளும், முதலாளித்துவ அறிஞர்களும் இந்த உலகில் எதை ஒப்புக் கொண்டாலும் (இந்த உலகமே அழிந்து போக ஒப்புக் கொண்டாலும்) இலாபமும் இலாப விகிதமும் குறைவதை ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். அதற்காக எதை வேண்டுமானாலும் செய்வார்கள். இந்த நிலையில் தான் சீனாவின் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் மாற்றம் செய்துவிட்டால், தங்கள் மூலதனத்தின் இலாப வெறிப் பயணத்திற்கு உராய்வு ஏற்படாது என்று "கண்டு" கொண்டார்கள். சோஷலிசப் பாதையில் இருந்து முதலாளித்துவப் பாதைக்குச் சறுக்கி விழுந்த சீனா, முதலாளிகளின், முதலாளித்துவ அறிஞர்களின் பரிந்துரையை ஏற்றுக் கொண்டது.

சரி! அப்போல்லோ மருத்துவமனையின் வாகன நிறுத்தத்தைப் பற்றிப் பார்ப்போம். சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள மருத்துவமனைக்கு வரும் வாகனங்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, நிரம்பி வழிந்த வாகனங்களை சாலைகளில் நிறுத்தினார்கள். குறுகிய காலத்திலேயே சாலைகளில் நிறுத்தப்பட்ட வாகனங்களும் நிரம்பி வழிய, அது மருத்துவமனைக்கு வரும் வழியையே மறைக்கத் தொடங்கியது. உடனே ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது. இதற்குத் தீர்வு காணவிரும்பிய அரசு மருத்துவமனைக்கு எதிரே உள்ள, மாநகராட்சிக்குச் சொந்தமான, இடத்தில் வாகன நிறுத்தத் தளங்களை அமைக்கலாம் என்று முடிவுசெய்தது. ஆனால் அதற்கு ஆகும் செலவுக்கு என்ன செய்வது என்ற பிரச்சினை வந்தது. உடனே அதைத் தனியாரிடம் கொடுத்து விடலாம் என்றும், அங்கு நிறுத்தப்படும் வாகனங்களுக்குக் கட்டணம் வசூலிப்பதன் மூலம் அந்தத் தனியார் நிறுவனம், தான் முதலீடு செய்த பணத்தை மீட்டுக் கொள்ளட்டும் என்றும், அதற்கான இலாபத்தையும் ஈட்டிக் கொள்ளட்டும் என்றும் முடிவுசெய்து, அப்பணிக்காகத் தனியார் நிறுவனங்களை அழைத்தது.

அந்த இடத்தில் வாகன நிறுத்தக் கட்டடத்தை மட்டும் கட்டினால் போட்ட முதலுக்குப் போதிய இலாபம் கிடைக்காது என்றும், கூடவே மூன்று தளங்கள் வணிக வளாகம் கட்டினால், அவற்றில் இருந்து கிடைக்கும் வாடகை மற்றும் வாகன நிறுத்தக் கட்டணமும் சேர்ந்து, திட்டத்தை இழப்பு ஏற்படாமல் நடைமுறைப்படுத்த முடியும் என்றும் வாகன நிறுத்தத் திட்டத்தை ஆய்வு செய்து பார்த்த நிறுவனங்கள் தெரிவித்தன. இப்பகுதியில் வணிக வளாகம் கட்டினால் அதனாலும் வாகனவரத்து அதிகமாகும் அல்லவா என்று வினவப்பட்ட பொழுது, அப்படி அதிகரிக்கும் வாகனங்களுக்கும் சேர்த்து வாகன நிறுத்தப் பரப்பை அதிகரித்து வாகன நிறுத்தத் தளங்களைக் கட்டமுடியும் என்று தனியார் நிறுவனங்கள் கூறின. அரசும் தனியார் நிறுவனங்களின் யோசனையை ஏற்றுக்கொண்டது.

சற்று யோசித்துப்பாருங்கள். மருத்துவமனைக்கு வரும் வாகனங்களினால் பேக்குவரத்து நெரிசல் அதிகரித்துள்ள நிலைக்குத் தீர்வு காணச் சொன்னால், போக்குவரத்து நெரிசலை மேலும் அதிகரித்துத் தீர்வு கண்டால், அது

சுற்றுப்புறத்தில் போக்குவரத்து நெரிசலை அதிகரிக்கும் அல்லவா? ஒவ்வொரு பிரச்சினைக்கும் இதைப் போலவே தீர்வு கண்டால் அது மாநகரப் போக்குவரத்தை அளவுக்கு மீறி அதிகரித்து வாகனங்களின் - மக்களின் நகர்தலை வெகுவாக மந்தமாக்கி விடுமே? இது நகரத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு இடையூறாக அமையுமே? அதுமட்டும் அல்லாமல் மக்களின் மனநலத்தையும் வெகுவாகப் பாதிக்குமே?

மூலதனத்தின் இலாப வேட்டைப் பயணத்தில் உராய்வு கூடாது என்பதற்காக முதலாளிகளின்- முதலாளித்துவ அறிஞர்களின் வழிகாட்டுதலில் புவி வளங்களை அளவுக்குமீறிப் பிழிந்து, எதிர்காலத் தலைமுறையினரின் உரிமைகளைக் கொள்ளை அடிக்கும் வண்ணம் மூன்றாவது குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று சீனா முடிவு எடுக்கிறது.

அப்போல்லோ மருத்துவமனை வாகன நிறுத்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்படும் போதும், முதலீட்டுக்கு அதிகமான இலாபம் வராமல் இருந்து விடக் கூடாது என்பதற்காக ஒட்டு மொத்த நகரப் போக்குவரத்தையே பாழாக்கி, பயணிகளின் பயண நேரத்தைச் சூறையடித்து, நகர வாழ்க்கையை நரக வாழ்க்கையாக்குவதற்கும், முதலாளித்துவ உற்பத்தி முறையின் சிந்தனைப் போக்கே அடிப்படைக் காரணமாக அமைகிறது.

மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போட முடியாதுதான். ஆனால், உலகின் எந்த ஒரு மூலையிலும், மக்கள் நலனுக்கு எதிராக நடக்கும் எந்த நிகழ்வையும் கூர்ந்து கவனித்துப் பார்த்தல், அதற்கு முதலாளித்துவப் பொருளாதார உற்பத்தி முறைதான் அடிப்படைக் காரணமாக இருப்பதைப் புரிந்து கொள்ளமுடியும். அவ்வாறு மக்கள் நலனுக்கு எதிராக இருக்கும் முதலாளித்துவ முறையை அப்படியே தொடரவிடப் போகிறோமா அல்லது எதிர்த்துப் போராடி அழித்து ஒழிக்கப் போகிறோமா?

●

*உடுத்திக்கொள்ள துணியில்லை; குடியிருக்க வீடில்லை; படிக்கப் பள்ளியில்லை; உயிர் வாழ்வுக்குப் பாதுகாப்பில்லை; எங்கும் கொள்ளை, கொலை, திருட்டு, 144, இப்படிப்பட்ட ராஜ்ஜியத்தை எப்படி சுயராஜ்ஜியம் என்று ஒப்புக்கொள்ள மனந்துணியும்? நாங்கள் கேட்கும் சுயராஜ்ஜியம் இது வல்லவே. சூத்திரனில்லாத சுயராஜ்ஜியமன்றோ - சுரண்டலற்ற சுயராஜ்ஜியமன்றோ நாங்கள் கேட்கின்றோம்.*

**- தந்தை பெரியார்**

# ஆய்வாளர் - தலித் உரிமை பெண்ணுரிமை - மனித உரிமை - செயற்பாட்டாளர் - கெய்ல் ஓம்வெத் மறைவு



அமெரிக்காவில் பிறந்து இந்தியாவிற்கு வந்து ஒடுக்கப்பட்டவர்கள் முன்னேற்றத்திற்காகவும் ஊர்ப்புற பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் பாடாற்றிய சமூகவியல் அறிஞர் பேராசிரியர் டாக்டர் கெயில் ஓம்வெத் (02.08.1941 - 25.08. 2021) மறைந்தார் என்பது மிகவும் துயரமானது.

மராத்திய மாநிலத்தில் பெரும்பங்கு பணியாற்றியவர். புலே, அம்பேத்கர் இயக்கத்தில் அவருக்கு இருந்த ஈடுபாட்டினால் மராத்திய மாநிலத்தில் வாழ்ந்தார். இவர் பரத்பட்னாகர் எனும் மராத்தியரைத் திருமணம் செய்து கொண்டார். மராத்திய மாநிலத்தில் பரத் பட்னாகருடன் இணைந்து 'உழைப்பாளர் விடுதலைக் கட்சி' (Shramik Mukti Dal) அய்த் தொடங்கியவர்களில் ஒருவர்.

புனே பல்கலைக்கழகத்தில் 'மேற்கு இந்தியாவில் பார்ப்பனரல்லாதார் இயக்கம்' (Cultural Revolt in a Colonial Society : The Non-Brahmin Movement in Western India 1873-1930) என்ற தலைப்பில் ஆய்வு செய்தார். புனே பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

25 நூல்களை எழுதியுள்ள இவரின், ஒடுக்கப்பட்டோரும் மக்கள் நாயகப் புரட்சியும் (Dalit and Democratic Revolution); மேற்கிந்தியாவில் பார்ப்பனரல்லார் இயக்கம்; இந்தியாவில் பவுத்தம்; பாபா சாகெப் டாக்டர் அம்பேத்கர்; மகாத்மா புலே ஆகிய நூல்கள் குறிப்பிடத்தக்கன.

ஒரிசாவில் உள்ள சமூகப் பணி - சமூக அறிவியல் தேசிய நிறுவனத்தில் [(National Institute of Social work and Social Sciences (NISWASS)] டாக்டர் அம்பேத்கர் இருக்கைப் பேராசிரியராகப் பணியாற்றினார். புனே பல்கலைக்கழகத்தில் புலே அம்பேத்கர் இருக்கைப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களுக்கு மும்பையிலும் தில்லியிலும் நன்கு அறிமுகமானவர்.

ஆய்வாளர், எழுத்தாளர், நூலாசிரியர், சாதி எதிர்ப்பு, பெண்ணுரிமை, மனித உரிமை, உழவர் உரிமை என பன்முகச் செயற்பாட்டாளர் கெய்ல் ஓம்வெத் மறைவுக்கு சிந்தனையாளன் ஆசிரியர் குழு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறது.

**அறிஞர் டாக்டர் கெயில் ஓம்வெத் புகழ் நீடு வாழ்க!**

# ஆப்கன் பிரச்சனையில் திக்குமுக்காடும் இந்தியா! முழுஅரசதந்திரத் தோல்வி!

பேராசிரியர் **த செயராமன்** நெறியாளர், தமிழ் மண் தன்னுரிமை இயக்கம்

**ஆஃப்கானிஸ்தானில் தாலிபான்களின் வெற்றி!**

ஆகஸ்ட் 15 அன்று ஆப்கன் தலைநகர் காபூலில் தாலிபான்கள் நுழைந்து தலைநகரைக் கைப்பற்றினர். 2001 முதல் கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த அமெரிக்கா தன் 'நேட்டோ' (North Atlantic Treaty Organization - NATO) கூட்டாளிப் படைகளை ஆகஸ்ட் 31-ஆம் தேதிக்குள் வெளியேற்றிக் கொள்வதாக 14 மாதங்களுக்கு முன்பே தாலிபான்களுடன் ஒப்பந்தம் செய்திருந்தது, 75,000 தாலிபான் வீரர்களை எதிர்த்து 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் கொண்ட நேட்டோ படையினர் போர் புரிந்தார்கள். அமெரிக்கா உறுதி கூறியபடியே ஆகஸ்ட் 31-ஆம் தேதி ஆப்கானிஸ்தானை விட்டு நேட்டோ படைகளை வெளியேற்றிக் கொண்டது. 2021 ஆகஸ்ட்டு 15-க்கு முன்பே அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தேசிய அரசின் 3 லட்சம் பேர் கொண்ட இராணுவம் காணாமல் போனது. இராணுவமும் காவல் படையும் சரணாகதி அடைந்து விட்டன. ஆப்கானிஸ்தானத்தில் அமெரிக்காவால் அதிகாரத்தில் வைக்கப்பட்ட ஜனாதிபதி அஷ்ரப் கனி ஓட்டம் பிடித்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் புகலிடம் பெற்றார்.

கடந்தகாலத்தில் 1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ் தானில் ஆட்சி -அதிகாரம் செலுத்திய தாலிபான்களை படைபலம் கொண்டு விரட்டிவிட்டு, அமெரிக்கா தன் கட்டுப்பாட்டுக்குள் ஆப்கானிஸ்தானை வைத்திருந்தது. தாலிபான்கள் தொடர்ந்து போரிட்டார்கள். இப்போது, அமெரிக்க ஏகாதிபத்திய வல்லாதிக்கம் ஆப்கானிஸ் தானில் ஒரு சரிவைச் சந்தித்து, மரியாதை கெட்டு வெளியேறி இருக்கிறது. சுமார் 75,000 பேர் கொண்ட தாலிபான்களை கட்டுக்குள் வைக்க முயன்ற 1 லட்சத்து 30 ஆயிரம் பேர் கொண்ட நேட்டோ படைகள், 3 இலட்சம் வீரர்களைக் கொண்ட தேசிய இராணுவம் மற்றும் காவல் படைகள் இன்று தோற்றுப் போயிருக்கின்றன. தேசிய இராணுவத்திற்குப் பயிற்சி கொடுக்க மட்டும் 8,800 கோடி டாலரை அமெரிக்கா செலவிட்டுள்ளது. 20 ஆண்டுகளில் நேட்டோப் படைகளுக்காக 2 லட்சம் கோடி டாலர் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இதில் களமிறங்கிய பிரிட்டன் தனியாக பெரும் தொகையைச் செலவு செய்திருக்கிறது. தாலிபான்களை அடக்க தரைவழித் தாக்குதல் முதல் வான்வழித் தாக்குதல்கள் வரை நடத்தப்பட்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இப்போது தொங்கிய தலையுடன் அமெரிக்கப் படைகள் வெளியேறியுள்ளன.



**பயங்கரவாதிகள் அறிவித்த பயங்கரவாதத்திற்கெதிரான போர்!**

முன்னாள் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று அறிவித்து தொடங்கிய ஆக்கிரமிப்பு அக்கிரமங்களில் ஆப்கானிஸ்தானில் நடந்தேறிய இறுதிக் காட்சி இது. மேற்கு ஆசியாவில் அமெரிக்க வல்லாதிக்கத்தை நிலைநிறுத்தவும், அமெரிக்க ஏகாதிபத்தியத் தேவைக்கு ஏற்ப புவிசார் அரசியலைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ளவும் ஆப்கானிஸ்தானில் 20 ஆண்டுகாலம் அமெரிக்கா ஆட்டம் போட்டது,

அமெரிக்கா 2001இல் ஆப்கானிஸ்தானில் தன் சொற்படி ஆடும் ஒரு பொம்மை அரசை திருவாளர் ஹமீது கர்சாய் தலைமையில் அமைத்தது. அமெரிக்கா 2003 மார்ச்சில் ஈராக்கின் மீது படையெடுப்பு நடத்தியது. ஈராக்கின் சதாம் உசைன் பயங்கரவாத அமைப்புடன் தொடர்பு கொண்டிருக்கிறார் என்றும், பயங்கர ஆயுதங்கள் ஈராக்கில் இருக்கின்றன என்றும் கூறி ஈராக்கைக் கொத்திப் புரட்டியது. பின்லேடனின் அல்கொய்தாவுடன் தொடர்பு இருப்பதாக ஈரானையும் குற்றஞ்சாட்டியது. லிபியா மீதும், சிரியா மீதும் அமெரிக்கா போர் தொடுத்தது. பொம்மை அரசுகளை நிறுவி அவற்றையும் தன் ஏகாதிபத்திய நாட்டாண்மை வளையத்திற்குள் கொண்டு வந்தது. இவை அனைத்துக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் என்று பெயர் சூட்டியது.

**அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தோல்வி தெளிவுபடுத்தும் உண்மை!**

எல்லாம் இருந்தும், அதிநவீன தொழில்நுட்பங்கள் கொண்ட படைப்பிரிவுகளை களமிறக்கியபோதும், விமானப்படை தாக்குதல் நடத்தியும், வரைமுறையில் லாமல் செலவு செய்தும், அமெரிக்காவால்

தாலிபான்களை வெற்றிகொள்ள முடியவில்லை. அமெரிக்காவின் தோல்வி ஓர் உண்மையை தெளிவுபடுத்தி இருக்கிறது. ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் ஒரு தேசத்தின் எழுச்சி பெற்ற இளைஞர்கள் களத்தில் நின்றால் எந்த ஆக்கிரமிப்பாளனும் வெற்றி பெற்றுவிட முடியாது என்பதே உண்மை.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்கா நடத்திய பெரும் போர்கள் அனைத்திலும் (வளைகுடாப் போர் தவிர) கொரியா, வியட்நாம், ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்கா தோல்விகளையே சந்தித்து இருக்கிறது.

**யார் இந்த தாலிபான்கள்?**

தாலிபான்கள் என்ற சொல்லுக்கு பஷ்டோ (Pashto) மொழியில் மாணவர்கள் என்று பொருள். ஆப்கானிஸ்தானத்தில், தெற்கே காண்டஹார் மற்றும் எல்மாண்ட் பகுதியைச் சேர்ந்த பட்டாணி இனத்தவர். தாலிபான்கள் ஆப்கானிஸ்தானின் மண்ணின் மைந்தர்கள். ஆப்கானிஸ்தான் என்பது ஆப்கானிய மக்களால் ஆளப்பட வேண்டும்; ஆப்கானிய மக்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் சமரசம் செய்து கொள்ளாதவர்கள்.

**ஆப்கானிஸ்தானத்தில் வன்முறை அரசியலும், அந்நியர் தலையீடும்!**

ஆப்கானிஸ்தானில் 1747 முதல் 1973 வரை முடியாட்சிதான் நிலவியது. 1973இல் சாகிர் ஷா என்ற ஆட்சியாளருக்கு தாவுத்கான் முடிவு கட்டினார். ஆனால், 1978-இல் தாவுத்கானையும் அவருடைய குடும்பத்தாரையும் கொன்றுவிட்டு, ஆப்கானிஸ்தான் மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற இடதுசாரி கட்சியினர் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். இடதுசாரிகளின் ஆட்சியை வலுப்படுத்துவதற்கு என்று கூறிக்கொண்டு, 1979-இல் சோவியத் யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானில் நுழைந்தன. இந்நிலையில் ஆப்கானிஸ்தானத்தில் ஆயுதம் தாங்கிய முஜாஹுதீன்கள் உருவாகி சோவியத் படைகளை எதிர்த்துப் போரிட்டார்கள். முஜாஹுதீன் களுக்கு அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜிம்மி கார்ட்டர் உதவி செய்தார். பாகிஸ்தான், ஐ.எஸ்.ஐ மூலம் முஜாஹுதீன்களுக்கு உதவி செய்தது. பத்து ஆண்டுகள் சோவியத் படைகள் தாக்கு பிடித்தன. 1989-ஆம் ஆண்டு சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறின. ஆனால் இடதுசாரி அமைப்பைச் சேர்ந்த நஜிபுல்லா அதிகாரத்தில் இருந்தார். அவருக்கு தொடர்ந்து சோவியத் ரஷ்யா ஆதரவு அளித்து வந்தது. 1992-இல் நஜிபுல்லா வீழ்ச்சி அடைந்தார். அதிகாரம் முஜாஹுதீன்கள் கைக்கு மாறியது. ஆனால் முஜாஹுதீன்களின் ஏழு உட்பிரிவு களுக்குள் முரண்பாடுகளும் போர்களும் எழுந்தன.

1994-இல் முஜாஹிதீன்களிலிருந்து வெளியேறி யவர்கள் தாலிபான்கள் ஆக உருவாக்கம் பெற்றனர். எல்மாண்ட் பகுதியைச் சேர்ந்த பட்டானியர்கள் முல்லா முகமது ஒமர் தலைமையில் தாலிபான்கள் என்ற பெயரில் ஓர் அமைப்பாக உருவாக்கம் பெற்றனர். 1996-இல் தாலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றி 2001 வரை ஆட்சி செய்தனர். இந்தக் காலகட்டத்தில் அவர்களுடைய சனநாயகமற்ற முறைகள், பெண்ணுரிமை மறுப்பு, இஸ்லாமியக் கோட்பாடுகளில் இருந்து சிறிதும் மாறக்கூடாது என்ற எண்ணத்தில் அவர்கள் இழைத்த பெரும்பிழைகள், ஆகியவை இன்றளவும் குற்றச்சாட்டு களாக முன்வைக்கப்படுகின்றன. 2001 செப்டம்பர் 11 அன்று அமெரிக்காவில் நியூயார்க்கில் உலக வர்த்தகக் கழகம் இயங்கிய இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்டது. பின்லேடனின் அல்கொய்தா அமைப்புதான் செப்டம்பர் 11 இரட்டைக் கோபுரத் தகர்ப்புக்குக் காரணம் என்று குற்றம் சாட்டிய அமெரிக்கா, அல்-கொய்தாவிற்கு ஆப்கானிஸ்தான் புகலிடம் தந்திருக்கிறது என்று குற்றம் சாட்டி, பின்லேடனைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தது. அமெரிக்கா தன்னுடைய நேட்டோ கூட்டுப் படைகளுடன் ஆப்கானிஸ்தானுக்குள் புகுந்தது. தங்கள் சொற்படி கேட்கும் ஒரு பொம்மை அரசை நிறுவியது. 20 ஆண்டுகள் ஆப்கானிஸ்தானத்தைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. இந்த 20 ஆண்டுகளும் தாலிபான்கள் தொடர்ந்து கொரில்லா முறையில் போரிட்டிருக்கிறார்கள்.



2001-இல் அமெரிக்க ஆதரவு பெற்ற ஹமீது கர்சாய் ஆப்கானிஸ்தான் இடைக்கால அரசின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். 2002-இல் இடைக்கால அதிபராக ஹமீது கர்சாய் பொறுப்பேற்றார். 2003-இல் புதிய அரசியல் சட்டம் கொண்டு வரப்பட்டது. இதன்படி, 2004-இல் தேசிய அளவிலான தேர்தல் நடைபெற்றது. அதில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஹமீது கர்சாய் புதிய அதிபரானார். 2005-இல் சட்டசபைத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதில் பெண்களும் போட்டியிட்டு அரசியல் பொறுப்புகளை ஏற்றார்கள். ஆனால் அமெரிக்க அரசின் கைப்பாவையாக அரசு இருந்தது, நேட்டோ படைகளின் கண்காணிப்பில் ஆப்கனிஸ்தான் இருந்தது.

2021-இல் அஷ்ரப் கனி ஆப்கானிஸ்தான் அதிபராக இருந்தார். அமெரிக்கக் கூட்டுப் படைகள் ஆகஸ்ட் 31

அன்று வெளியேறுவதாக அறிவித்ததும், அஷ்ரப் கனி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாட்டில் புகலிடம் தேடி ஓடிவிட்டார். 2020 பிப்ரவரி 29 ஆம் தேதியே அமெரிக்கா ஓர் அமைதி ஒப்பந்தத்தை தாலிபான்களுடன் முடிவு செய்தது. அதன்படி, ஆகஸ்ட் 31-க்குள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேற ஒத்துக்கொண்டது. அமெரிக்காவில் உள்ள பிரவுன் பல்கலைக்கழகம் ஆய்வு செய்து அறிவித்தபடி, இந்த 20 ஆண்டுகளில் தாக்குதல்களில் 2 லட்சத்து 40 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அமெரிக்கா 164 லட்சம் கோடிகள் செலவு செய்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக் கிறது.

### பழைய தவறுகளைச் செய்ய மாட்டோம் என்கிறது தாலிபான்!

அமெரிக்கா வெளியேறிய நிலையில், தாலிபான்கள் 1996 முதல் 2001 வரை அதிகாரம் செலுத்திய காலகட்டத்தில் செய்த தவறுகளைத் திரும்பவும் செய்ய மாட்டோம் என்று அறிவித்தார்கள். அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும், ஆகஸ்ட் 31-க்குப் பிறகுதான் அனைத்து தரப்பினரையும் சேர்த்து அரசு அமைக்கப்படும் என்றும், இஸ்லாமிய பாரம்பரியத்தை ஏற்று பெண்களுக்கும் கல்வி-வேலைவாய்ப்புகள் பெற உரிமையுண்டு என்றும், அனைத்துக் கட்சியினரையும் கொண்ட நிர்வாக நெறிமுறை அமைக்கப்படும் என்றும் அறிவித்தார்கள்.

தாலிபான்கள் ஷரியத் சட்டம் என்ற பெயரில் பெண்களின் ஒட்டுமொத்த உரிமையையும் மறுத்து விடுவார்களோ என்ற அச்சம் இன்றளவும் நிலவுகிறது. தாலிபான்கள் ஆப்கானிஸ்தானின் மண்ணின் மைந்தர்கள். சோவியத் யூனியனின் ஆக்கிரமிப்பை முஜாஹுதீன்கள் அகற்றினார்கள். அந்நிலையில் தீவிரவாதத்திற்கு எதிரான போர் என்று அமெரிக்கா நுழைந்தது. அப்படி நுழைந்த அமெரிக்கப் படைப் பிரிவுகளை எதிர்த்து தாலிபான்கள் போராடினார்கள். இப்போது அமெரிக்கா வெளியேறும் நிலையில் பல நாடுகள் பதைக்கின்றன. ஆப்கானிஸ்தானத்தில் காலூன்றிய அந்நியர்களுக்கு அமெரிக்கா வெளியேறுவது கசப்பைத் தருகிறது.

தாலிபான்களின் வெற்றி ஏகாதிபத்தியக் கூட்டாளிகளுக்கு பதற்றத்தை தருகிறது! அடிப்படைவாதிகள் என்று விமர்சிக்கப்படும் தாலிபான்கள் பெண்கள் உரிமை, சிறுபான்மையர் உரிமை, பிற இனங்களின் உரிமை ஆகியவற்றை எப்படிக் கையாளப் போகிறார்கள் என்பது குறித்து நம்பிக்கையும், அச்சமும் பல்வேறு நாடுகளிடையே நிலவுகின்றன. ஆகஸ்ட் 15-ஆம் தேதி காபூலுக்குள் தாலிபான்கள் நுழைந்தார்கள். ஆகஸ்ட் 16-ஆம் தேதி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் அவசரக் கூட்டத்தை நடத்தியது. அதில் இஸ்லாமிய தீவிர அமைப்பாகிய ஐ.எஸ்.ஐ. அமைப்பு மற்றும் அல்-கொய்தாவிற்கு ஆப்கானிஸ்தானில் புகலிடம் அளிக்ககூடாது என்று நிர்பந்திக்க ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் முடிவெடுத்தது.

### இந்தியாவின் கோளாறான ஆப்கானிய கொள்கை :

ஆப்கன் விவகாரத்தில் அமெரிக்காவுக்கு இந்தியா தொடர்ந்து ஆதரவளித்து வந்திருக்கிறது. 2001-இல் அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாய் அமெரிக்காவுக்கு முழு ஆதரவு கொடுத்தார். ஆப்கானிஸ்தானின் ஆயுதம் தாங்கிய போராளிகள் இந்தியாவின் மீது கடும் கோபம் கொள்ளப் போதுமான காரணங்கள் இருக்கின்றன. இந்தியா அமெரிக்காவின் ஒரு சூழ்ச்சிமிக்க நம்பகக் கூட்டாளியாக விளங்கி வந்திருக்கிறது. அமெரிக்காவுடன் பல இராணுவ உடன்பாடுகளையும் இந்தியா செய்து கொண்டிருக்கிறது.

இந்தியாவைப் பொருத்தவரை, சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை என்பது இல்லாமலே போனது. ஆப்கானிஸ்தானில் இந்தியா ஒரு கோளாறான கொள்கையைக் கடைபிடித்து வந்திருக்கிறது. 1996-2001 ஆகிய காலகட்டத்தில், தாலிபான் அரசு நிலவிய காலத்தில் தாலிபான்களை எதிர்த்துப் போரிட்ட வடக்குக் கூட்டணி (Northern Alliance) படைகளை இந்தியா ஆதரித்தது. இந்த வடக்குக் கூட்டணியை ரஷ்யா, இந்தியா, ஈரான் ஆகியவை அப்போது ஆதரித்தன. இப்போது இரஷ்யா, ஈரான், சீனா ஆகியவை தாலிபான்கள் அரசை உருவாக்குவதற்கு முன்பே பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிவிட்டன. தெற்காசியாவில் இந்தியா தனிமைப்பட்டு இருக்கிறது. மோசமான வெளியுறவுக் கொள்கையை இந்தியா கடைபிடித்து வந்திருப்பது இப்போது அப்பட்டமாகத் தெரிகிறது. தாலிபான்களை இந்தியா விமர்சிப்பது வேடிக்கையானது. இந்துத்துவம் பேசிக்கொண்டு, தாலிபான்களின் அடிப்படைவாதத்தை இந்து-இந்தியத் தேசியவாதிகள் விமர்சிக்க முடியாது. இந்தியாவின் மதச்சார்பின்மையை வெறுக்கும் இந்துத்துவவாதிகள் ஆப்கானிஸ்தானத்தில் மட்டும் எப்படி பிறரிடம் மதச்சார்பின்மையைக் கோரமுடியும்? இப்போது பெரும் பொருளைச் செலவு செய்துவிட்டு, ஏராளமான அமெரிக்கப் படை வீரர்களையும் இழந்துவிட்டு, 20 ஆண்டுகாலம் ஒரு பொம்மை அரசை நிறுவி அதற்குத் துணையாக இருந்த அமெரிக்காவால் தீவிரவாதத்தையும் ஒழிக்க முடியவில்லை; அங்கு ஒரு சமரச ஒப்பந்தத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. தோல்விகண்டு, தொங்கிய முகத்துடன் வெளியேறும் போது அமெரிக்காவின் கூட்டாளியாக இருந்த இந்தியாவும் அவசரம் அவசரமாக ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி இருக்கிறது,

### ஆக்கிரமிப்பு நாடுகளின் புவிசார் அரசியல் :

ஆப்கானிஸ்தானில் பல்வேறு நாடுகள் தலையீடு செய்திருக்கின்றன. அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. இந்தியாவுக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. ஆப்கானிஸ்தானத்தில் அளவுக்கு மீறி

இந்தியா பணத்தை கொட்டி பல திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் நோக்கம் தான் என்ன?

ஆப்கானிஸ்தான் தன் கட்டுப்பாட்டில் இருப்பது அவசியம் என்று அமெரிக்கா கருதுகிறது. அதனுடைய புவிசார் அரசியல் முதலில் இரஷ்ய எதிர்ப்பு செயல்திட்டத்தைக் கொண்டிருந்தது, இப்போது சீன எதிர்ப்புச் செயல்திட்டத்தை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதுபோன்றே இந்தியாவுக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அண்டை நாடுகளின் மீது தன் மேலாதிக்கத்தை நிறுவும் நோக்கத்தை வெளிப்படையாக அறிவிக்காமல் இந்தியா நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது, ஆப்கானிஸ்தான் மீது அளவுகடந்த இந்தியப் பாசத்துக்குக் காரணம், ஆப்கானிஸ்தானத்தில் ஒரு இராணுவத் தளத்தை நிறுவி பாகிஸ்தானை சுற்றி வளைத்து விட வேண்டும் என்ற எண்ணம்தான் என்ற கருத்து நிலவுகிறது. ஆப்கானிஸ்தானின் தெற்கிலும் கிழக்கிலும் பாகிஸ்தான் இருக்கிறது. கிழக்கே சீனா அமைந்திருக்கிறது. 70 கிலோ மீட்டர் எல்லையை ஆப்கானிஸ்தானும் சீனாவும் பகிர்ந்து கொள்கின்றன. வடக்கில் துருக்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளும், ஆப்கானிஸ்தானின் மேற்கே ஈரானும் அமைந்துள்ளன, கடல் இல்லாத ஆப்கானிஸ்தான் கேந்திர முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. மத்திய ஆசியாவுக்குச் செல்லும் வணிகப் பாதைகள் ஆப்கானிஸ்தான் வழியே செல்கின்றன. மேற்கு ஆசியப் பகுதியும் கிழக்குப் பகுதியும் சந்திக்கும் இடத்தில் ஆப்கானிஸ்தான் இருக்கிறது. 1979-இல் சோவியத் ரஷ்யாவின் படைகள் உள்ளே நுழைந்ததற்கும் இதே புவிசார் அரசியல்தான் காரணம். அப்போது அதைத் தடுப்பதற்கு அமெரிக்கா, சவுதி, துருக்கி, பிரிட்டன், சுவிட்சர்லாந்து ஆகியவை முஜாஹிதீன் அமைப்புக்கு ஆயுத உதவி செய்தன. முஜாஹிதீன் அமைப்பு கொரில்லா போர் முறையை பின்பற்றி சோவியத் படைகளை வெளியேற்றியது. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் இறந்தனர்; 50 இலட்சம் பேர் அகதிகளாக மாறினர். அன்றைய காலகட்டத்தில் உலக அளவில் இருந்த அகதிகளில் பாதிப்பேர் ஆப்கானிஸ்தானில் இருந்தனர். இதில் பெற்றோர் அற்ற பிள்ளைகள் பெரும் எண்ணிக்கையில் ஆதரவற்று விடப்பட்டனர். இவர்களை மதரஸாக்கள்தாம் வளர்த்தன. உறவுகளற்ற அந்தப் பிள்ளைகள் போரினால் தங்கள் பெற்றோர்களை இழந்த நிலையை உணர்ந்து, எதையும் எதிர்த்து நிற்கக்கூடிய உளநிலையைக் கொண்டவர்களாக வளர்ந்தனர். அவர்கள்தான் இப்போது அமெரிக்க நேட்டோ படைகளை எதிர்த்து ஆயுதம் தூக்கியவர்கள்.

**ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறத் துடிக்கும் ஏகாதிபத்தியக் கைக்கூலிகள்!**

ஆகஸ்டு 15 அன்று தாலிபான்கள் காபூலைக் கைப்பற்றியதும் ஒரு பதற்றம் பல நாடுகளைப் பற்றிக்




கொண்டது. ஆப்கானிஸ்தானில் இருந்த தங்கள் நாட்டவர்களை அந்தந்த நாடுகள் விமானங்கள் மூலம் வெளியேற்றத் தொடங்கின. வெளிநாட்டவர்கள் வெளியேறுவது என்பது இயல்பானது, ஆப்கானியர்களிலும் ஒரு இலட்சம் பேருக்கு மேல் வெளியேற விரும்பினார்கள். அவர்களில் பல ஆயிரம் பேர் காபூல் சர்வதேச விமான நிலையத்தில் கூடிவிட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் விமான நிலையத்தில் கூடினாலும்கூட தாலிபான்கள் அவர்களைத் தாக்கவில்லை. காபூல் சர்வதேச விமான நிலையம் அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில்தான் அப்போதும் இருந்தது. கூட்டத்தைக் கட்டுப்படுத்த அமெரிக்கப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் பலர் இறந்தனர். 19-08-2021 அன்று, அமெரிக்க சரக்கு விமானம்-17 என்ற விமானத்தில் நெருக்கியடித்துக் கொண்டு 640 பேர் உட்கார்ந்தார்கள்; அவர்கள் மடியில் இருந்த குழந்தைகளுடன் அதில் பயணித்தவர்கள் 823 பேர், இவ்வளவு பேரும் வெளியேறுவதற்கு என்ன காரணம்? தாலிபான்கள் கெட்டவர்கள்; கொடுமையானவர்கள்; ஆகவே அவர்கள் ஆளும்வரை அந்த நாட்டில் வாழக்கூடாது என்ற எண்ணம் காரணமா என்றால், நிச்சயமாக இல்லை.

இதற்கான காரணத்தை எளிதாக நேட்டோ அமைப்பின் அறிக்கையிலிருந்து புரிந்து கொள்ளலாம் (20-08-2021). "நேட்டோ படைகளுக்கு உதவிய ஒரு இலட்சம் ஆப்கானிஸ்தான் மக்களை உடன் அழைத்துச் செல்ல உறுதி அளிக்கப்பட்டிருந்தது. சில ஆயிரம் பேர் மட்டுமே அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காபூல் விமான நிலையத்தில் பரிதவித்து வருகின்றனர்."

இங்கிலாந்தின் பிரதமர் போரிஸ் ஜான்சன் இவ்வாறு கூறுகிறார் : "பிரிட்டன் இருபதாயிரம் மக்களை ஏற்க இருக்கிறது. அதில் முதலில் 5 ஆயிரம் பேரை ஏற்கிறோம்." அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜோ பைடன் இப்படிக் கூறுகிறார்: "அமெரிக்காவுக்கு உதவியாக இருந்ததால் தற்போது தாலிபான்களின் கோபப் பார்வையில் இருக்கும் ஆப்கானிஸ்தான்

மக்களும் நிச்சயம் மீட்கப்படுவர், 50 முதல் 60 ஆயிரம் ஆப்கானிஸ்தான் மக்களை பாதுகாப்பாக வெளியேற்ற அமெரிக்க இராணுவம் தனது உறுதிப்பாட்டைத் தெரிவிக்கிறது. ஆப்கானிஸ்தானில் இருந்து மக்களைக் காப்பாற்றுவது வரலாற்றிலேயே மிகக் கடினமான மீட்புப்பணி, இந்தப் பணியின்போது உயிரிழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது" அந்தந்த நாடுகள் தங்கள் நாட்டைச் சேர்ந்தவர்களை தாலிபான்கள் தாக்கி விடுவார்கள் என்று கருதி தங்கள் தூதரகங்கள் மூலமாக மீட்டுச்செல்கிறார்கள். ஆகஸ்டு 15-ஆம் தேதி, ஞாயிற்றுக்கிழமை, தாலிபான்கள் காபூலைக் கைப்பற்றினார்கள்.

திங்கள்கிழமை 40 இந்தியர்களை இந்தியா அழைத்து வந்தது. செவ்வாய்க்கிழமை 150 பேரையும், புதன்கிழமை 90 பேரையும் இந்தியத் தூதரகம் மூலமாக விமானங்கள் அழைத்து வந்தன. யார் வெளியேறுவதையும் தாலிபான்கள் தடுக்கவில்லை. ஆப்கானிய நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளியேறுவது மட்டும்தான் அவர்களுக்கு கவனத்தில் கொள்ள விரும்பிய பிரச்சினை. இதற்கிடையில் 21 ஆகஸ்ட் 2021 அன்று தாலிபான்கள் 150 இந்தியர்களைக் கடத்திவிட்டதாக செய்திகள் வெளியாகின. இதுகுறித்து தாலிபான்களின் செய்தித் தொடர்பாளர் அகமதுல்லா வாசிக் "அவர்கள் விசாரணைக்காக மற்றும் ஆவணங்கள் ஆய்வுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்; ஆவணங்கள் ஆய்வு முடிந்ததும் கொண்டு வந்து விடப்பட்டார்கள்" என்று தெரிவித்தார். பதற்றத்தை உருவாக்குவதிலும், தாலிபான்கள் பயங்கரவாதிகள் என்ற கருத்தை உருவாக்குவதிலும் பத்திரிகைகள் குறியாக இருக்கின்றன. தாலிபான்களை பொருத்தவரை வெளிநாட்டவர்களை அச்சுறுத்தவில்லை. நாட்டிற்கு எதிராக அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளுக்குக் கையாட்களாகச் செயல்பட்டவர்கள், தற்காலிகப் படைப்பிரிவுகளாக செயல்பட்டவர்கள் மட்டுமே அஞ்சுகிறார்கள். ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள்.

இந்தியாவில் மக்கள் பட்டினி! ஆப்கானிஸ்தானுக்கு உள்நோக்கத்தோடு அளிக்கப்பட்ட உதவிகள்! பல அந்நிய நாடுகள் ஆப்கன் அரசாங்கத்திற்கு ஏராளமான உதவிகளைச் செய்து இருக்கின்றன. ஆனால் அவற்றுக்குப் பின்னால், தங்களுடைய புவிசார் அரசியல் மற்றும் தங்கள் அதிகாரத்தை நிறுவிக் கொள்வது, தங்கள் எதிரிகளை நிர்மூலம் செய்ய ஒரு தளமாக ஆப்கானிஸ்தானை பயன்படுத்துவது போன்ற நோக்கங்களை மறைத்து நட்பு பாராட்டி வந்திருக்கின்றன. இந்தியா எந்த நோக்கத்தில் ஆப்கானிஸ்தான் நாட்டில் ஈடுபாடு காட்டியது என்பது ஆய்வுக்குரியது. 2001-இல், வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்திலருந்தே இந்தியா அமெரிக்கச் சார்புடன் நடந்து வந்திருக்கிறது. ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஆதரித்தது. தாலிபான்களுக்கு எதிராக போரிட்ட வடக்குக் கூட்டமைப்பை இந்தியா ஆதரித்தது. ஈரான் அமெரிக்காவின் வெறுப்பைச் சம்பாதித்த நிலையில், ஈரானை இந்தியாவும் புறக்கணித்தது. ஈரானிடமிருந்து எண்ணெய் கொள்முதல் செய்வதை அமெரிக்கா நிறுத்தக் கூறியதால், ஈரானில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதை இந்தியா நிறுத்திக் கொண்டது.

ஆப்கானிஸ்தானில் ஹீரட் மாகாணத்தில் 2000 கோடி செலவில் சல்மா அணையை இந்தியா கட்டிக் கொடுத்தது. இது இரண்டு இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு பாசனத்திற்குப் பயன்படுகிறது. ஆப்கானிஸ்தானின் மின் தேவையை பூர்த்தி செய்யவும் உதவுகிறது. 2016-இல் நரேந்திர மோடியும் அஷ்ரப்கனியும் சேர்ந்து அந்த அணையைத் திறந்தனர். 2015-இல் ஆப்கன் பாராளுமன்றத்தை 100 ஏக்கர் பரப்பளவில் 650 கோடி ரூபாய் செலவில் இந்தியா கட்டிக் கொடுத்தது. ஒரு பகுதிக்கு வாஜ்பாய் பெயர் வைக்கப்பட்டு அதை நரேந்திர மோடி திறந்து வைத்தார். 2009-இல் இந்தியாவை காங்கிரஸ் ஆட்சி செய்த காலத்தில், 1500 கோடி செலவில் 218 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலையை இந்தியா அமைத்துக் கொடுத்தது. 100 ஆண்டுகள் பழமையான ஸ்டோர் அரண்மனையை (Stor Palace) 2016-இல் புதிப்பித்து, நரேந்திர மோடி அதைத் திறந்து வைத்தார். 1985-இல் காபூல் குழந்தைகள் மருத்துவமனையை இந்தியா கட்டிக் கொடுத்தது. அது இப்போது புதுப்பிக்கப் பட்டது. இவையன்றி பக்கல் மாகாணத்திலிருந்து காபூல் நகரத்திற்கு செல்லும் 220 கிலோ வாட் மின்வழித் தடத்தை இந்தியா அமைத்துக் கொடுத்தது. 400 பேருந்துகள், 200 மினி பேருந்துகள், 285 இராணுவ வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் என்று ஏராளமான உதவிகளையும், செயல்திட்டங்களையும் இந்தியா நடத்தியிருக்கிறது. இப்போதும் 400 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை இந்தியா மீதி வைத்திருக்கிறது. தாலிபான் செய்தித் தொடர்பாளர் சுஹைல் ஷஹீன் இப்படி கூறுகிறார் : "எங்கள் நாட்டை தங்களின் ராணுவத் தளமாக இந்தியா மாற்ற முற்பட்டால், அதற்கான விளைவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். ஆப்கானிஸ்தானில் கால்பதித்த பெரிய சாம்ராஜ்யங்கள் காணாமல் போய்விட்டதை இந்தியா நினைவில் கொள்ள வேண்டும்" இதற்கு என்ன பொருள்? இந்தியா ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அருகிலுள்ள தாஜிகிஸ்தானில் ஒரு விமான தளத்தைப் பெற்றிருக்கிறது. ஆப்கானிஸ்தானில் ஒரு ராணுவத் தளம் இந்தியாவுக்குக் கிடைக்குமானால் பாகிஸ்தானை சுற்றி வளைத்து விடலாம். ஆப்கானிஸ்தானில் ஒரு ராணுவத் தளத்தை பெறும் நோக்கம் இந்தியாவுக்கு இருக்கிறது என்பதுதான் தாலிபான்களின் புரிதல் ஆகும். ஆகவே இந்தியாவை ஓர் அச்சுறுத்தலாகப் பார்க்கிறார்கள். தாலிபான்கள்

காபூலில் நுழைந்த பிறகு, வேறு இடங்களில் உள்ள இந்தியத் துணைத் தூதரகங்களுக்குள் புகுந்து ஆவணங்களைத் தேடி இருக்கிறார்கள். இந்தியாவின் நோக்கங்களை அறிந்து கொள்வதில் குறியாக இருக்கிறார்கள்.

அந்நியர்களை ஏற்காத அரசியலை நடத்தும் ஆப்கானியர்கள் முன்பு சோவியத் இரஷ்யாவை வெளியேற்றியது போல, இப்போது அமெரிக்காவையும் வெளியேற்றி விட்டார்கள். அமெரிக்க செல்வாக்கு சரிந்தது இந்தியாவின் கவலையை அதிகரிக்கச் செய்கிறது. ஆப்கானிஸ்தானில் இப்போது பெரிய அண்ணன் இல்லை. இந்நிலையில் மேற்கு ஆசிய பகுதியில் தன் அதிகாரத்தை மெல்ல நிலைநிறுத்தும் நோக்கம் இந்தியாவுக்கு இருந்திருக்குமானால், அது இனி சாத்தியமில்லை. அமெரிக்கா வெளியேறிச் சென்ற பிறகு என்ன செய்வது என்று இந்தியா திகைக்கிறது. யாரையெல்லாம் தனது எதிரியாக இந்தியா கருதியதோ, அந்த நாடுகள் எல்லாம் ஆப்கானிஸ்தானுக்கு நட்புக்கரம் நீட்டிவிட்டன.

சீனா தனது நட்பை ஆப்கானிஸ்தானுக்கு அறிவித்திருக்கிறது. தாலிபான்கள் சீனா சென்று சீன வெளியுறவுத்துறை அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தி விட்டார்கள். சீனாவுக்கு எதிரான செயல்பாட்டுக்கு இடமளிக்கமாட்டோம் என்ற ஒற்றை உறுதி மொழியை மட்டுமே சீனா கோரியது. ஏனெனில் ஜின்ஜியாங் மாகாணத்தில் வாழும் வீகர் முஸ்லிம்கள் சீனாவை எதிர்த்து புரட்சி செய்யும் உளநிலையில் உள்ளவர்கள். அவர்களுக்கு ஆப்கானிஸ்தான் உதவி செய்துவிடக் கூடாது என்பது மட்டுமே சீனாவின் கோரிக்கை. சீனாவுடன் நட்பு பாராட்டும் பாகிஸ்தான் முன்னமே ஆப்கானிஸ்தானுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது. ரஷ்யாவில் தாலிபான் தடை செய்யப்பட்ட இயக்கம். ஆனால் இப்போது ரஷ்யா காபூலில் தலிபான்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறது. "தாலிபான்கள் நன்றாக ஆட்சி செய்வார்கள்" என்று ரஷ்ய தூதர் சான்றளிக்கிறார். பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் "அடிமைத்தனத்தின் சங்கிலிகளை தாலிபான்கள் உடைத்தெறிந்து விட்டார்கள்" என்று பாராட்டுகிறார். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜோ பைடன் "வேறு நாட்டைக் கட்டியெழுப்புவது அமெரிக்காவின் வேலை இல்லை. அமெரிக்க மண்ணில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படக் கூடாது என்பதால்தான் போர் நடத்தினோம்" என்று தன் கைகளைக் கட்டிக்கொண்டார். ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவைப் போலவே ஆப்கானியர்களைக் கொண்ட தற்காலிகப் படைப் பிரிவுகளை உருவாக்கி அதிகாரம் செய்ய முற்பட்ட இங்கிலாந்தின் பிரதமர் போரிஸ் ஜான்சன், இப்போது தாலிபான்களுடன் இணைந்து பணியாற்றத் தயார் என்று அறிவித்திருக்கிறார்.

இந்தியாவைச் சுற்றி இருக்கக்கூடிய நாடுகளான சீனா, மியான்மர், வங்காள தேசம், இலங்கை, பாகிஸ்தான் ஆகியவை இந்தியாவுடன் நல்லுறவில் இல்லை. வெளிப்படையான பகை உணர்வை இந்தியாவிடம் வெளிப்படுத்தாவிட்டாலும், அண்டை நாடுகள் சீனாவுடன் நட்புறவு பாராட்டுகின்றன. அண்டை நாடுகளின் நட்புறவை பெறமுடியாத இந்நிலையில் ஆப்கானிஸ்தான் தாலிபான் கைக்கு வந்த பிறகு இந்தியா திகைத்து நிற்கிறது. ஜவஹர்லால் நேரு பிரதமராக இருந்த காலத்தில் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் ஒரு மரியாதை இருந்தது. ஜவஹர்லால் நேரு காலத்தில் அணிசேரா நாடுகள் என்று நடுநிலை நாடுகளை நேரு ஓரணி ஆக்கினார். கூட்டுசேராக் கொள்கை கடைபிடிக்கப் பட்டது. இரஷ்யாவும் அமெரிக்காவும் இந்தியாவுடன் நட்பு பாராட்டின. ஆனால் அரசு தந்திரத்தோடு செயல்படுவதாக நினைத்து, இந்தியாவின் நலன்களை அந்நிய மண்ணில் நிலை நிறுத்துவதாகக் கருதிக்கொண்டு, அமெரிக்க பெரியண்ணனின் கீழ் சின்ன அண்ணனாக வளர்ச்சி பெற முயற்சித்து, இன்று இந்தியா தனித்து நிற்கிறது, தெற்கு மற்றும் மேற்கு ஆசியாவில் இந்திய அரசதந்திரம் பெரும் பின்னடைவைச் சந்தித்திருக்கிறது.

காலங்கடந்து, தாலிபான்களுடன் எப்படியாவது நட்புறவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியா முயற்சி செய்கிறது. ஐக்கிய நாடு பாதுகாப்புக் கவுன்சிலில் தற்போது இடம்பெற்றுள்ள இந்தியா பயங்கரவாதக் குழுக்களை ஊக்குவிக்க மாட்டோம் என தாலிபான்கள் கொடுத்த உறுதியைக் காக்க வலியுறுத்தி தீர்மானம் இயற்றப்பட்டபோது ஆதரவு தெரிவித்திருக்கிறது. ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் உள்ள ஐந்து நிரந்தர உறுப்பினர்களில் சீனாவும், இரஷ்யாவும் இந்த தீர்மானத்தைப் புறக்கணித்து இருக்கின்றன. ரஷ்யா மற்றும் சீன எல்லைகளில் செயல்படும் தீவிரவாதக் குழுக்களின் பெயர்கள் தீர்மானத்தில் காட்டப்படவில்லை என்பது அந்நாடுகளின் குற்றச்சாட்டு. கத்தார் தலைநகர் தோஹாவில் தாலிபான்களின் அரசியல் அலுவலகத்தில் தாலிபான் அரசியல் அலுவலகத் தலைவர் ஷேக் முகமது அப்பாஸை இந்தியத் தூதர் தீபக் மிட்டல் சந்தித்துப் பேசியிருக்கிறார், தாலிபானின் அழைப்பை ஏற்றுப் பேசியதாக இந்தியா கூறிக் கொள்கிறது. அரசியல் மற்றும் வர்த்தக உறவுகளைத் தொடர வேண்டும் என்று தாலிபான்கள் விரும்புவதாக இந்தியா தெரிவித்து இருக்கிறது, இந்தியா தன்னுடைய முந்தைய நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்து வருகிறது. அதைத் தவிர இந்தியாவுக்கு வேறு வழியில்லை.

ஆப்கானிஸ்தான் அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அருகாமை நாடுகளைப் பாதிக்கும். 2009-இல் தாலிபான் துணைத்தலைவர் சிராஜுதீன் ஹக்கானி

இந்தியத் தூதரகத்தை தாக்கினார். இப்போதும் தாலிபான்களின் ஹக்கானி குழுவே ஆயுத பலம் வாய்ந்தது. முதலில், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆப்கானிஸ்தானை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றியுள்ள ஆட்சி அதிகாரத்துக்கு இந்தியா ஏற்பளிக்காது என்றார். இந்தியத் தூதரகமும் காலி செய்யப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது இந்தியா வேறு வழியில்லாமல் பேச்சுவார்த்தை நடத்த விரும்புகிறது. 2021 ஆகஸ்ட் 31 அன்று தாலிபான் தலைவர் ஷெர் மொஹம்மத் அபாஸ் ஸ்டானெஸ்ஸாயுடன் முதல் சந்திப்பை ஏற்படுத்தி இந்தியா தன் கவலைகளை வெளியிட்டது.

தாலிபான் தலைவர் சுஹைல் ஷாஹீல் கத்தார் தலைநகர் தோஹாவில் அளித்த பேட்டியில், "முஸ்லிமாக இருப்பதால் காஷ்மீரிலோ, இந்தியாவிலோ அல்லது வேறு எந்த நாட்டிலோ வாழும் முஸ்லிம்களாக இருந்தால் குரல் கொடுக்க எங்களுக்கு உரிமை உண்டு" என்று கூறியிருக்கிறார். தாலிபான்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்க வாய்ப்பிருக்கிறது. 2001-ஆம் ஆண்டு தாலிபான்களை எதிர்த்த வடக்குக் கூட்டணி குழுவை இந்தியா ஆதரித்து இருக்கிறது. இந்தியா செயல் தந்திரப் பின்னடைவு அடைந்திருக்கிறது. ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியா வெளியேற்றப்பட்டுள்ளது என்று கூறலாம். கடந்த 20 ஆண்டுகளில் இந்தியாவிற்கு இருந்த மரியாதை சரிந்துவிட்டது. எந்தத் தாலிபான்களை இந்தியா எதிர்த்து எதிரணிக்கு ஆதரவளித்ததோ, அதே தாலிபான்களுடன் இப்போது வேறு வழியில்லாமல் பேச்சுவார்த்தை நடத்துகிறது, ஆப்கானிஸ்தான் நிலத்தை தனக்கு எதிராகப் பயன்படுத்தப் பார்ப்பதாக இந்தியாவை பாகிஸ்தான் குற்றம் சாட்டுகிறது. தாலிபான்கள் "பாகிஸ்தான் எங்கள் இரண்டாவது வீடு" என்கிறார்கள். தாலிபான்களும் பாகிஸ்தானும் நெருக்கமாக இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி, தாலிபான்கள் சீனாவுடன் கைகோர்க்கிறார்கள். 1996- 2001 இவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் தாலிபான்களின் அரசை பாகிஸ்தான், சவுதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை அங்கீகரித்தன. இப்போது சீனா, ரஷ்யா, ஈரான் ஆகியவை ஆப்கானிஸ்தானுடன் இணைந்து செயல்பட விருப்பம் தெரிவித்துள்ளன. தாலிபான்களை ஏற்கவே மாட்டோம் என்று சமீபத்தில் அறிவித்த இந்தியாவுக்கு இப்போது வேறு மாற்று இல்லை. தாலிபான்களை இந்தியா அங்கீகரித்தாக வேண்டும். தாலிபான்களின் வீரத்தையும் ஈகத்தையும் ஏற்று, உலக நாடுகள் அங்கீகரிக்கத் தயாராகும் நிலையில், தாலிபான்கள் தங்களை சனநாயகப்படுத்திக்கொள்ள வேண்டும். இதைத்தான் சர்வதேச சமூகம் வலியுறுத்த வேண்டும். பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் உரிமைகளை தாலிபான்கள் முழுமையாக அங்கீகரிக்க வேண்டும். தங்கள் தாயகத்தை அந்நிய சக்திகள் ஆளக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கும் தாலிபான்கள், சனநாயக முறைமைகளைப் பின்பற்றுவதிலும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும். ஆப்கானிஸ்தானின் நட்பு நாடுகளும், சர்வதேச சமூகமும் இதைச் சுட்டிக்காட்டி வழிப்படுத்த வேண்டும். 1973-இல் சாகிர் ஷா காலத்தில் முடியாட்சி முடிவுற்ற நாளிலிருந்து இன்றுவரை, 48 ஆண்டுகளாகத் தொடர்ந்து ஆயுதப் போராட்டங்களும் போர்களுமாக ஆப்கானிஸ்தான் வதைபட்டிருக்கிறது. 1979 முதல் 2021 வரை அந்நியர்களின் மேலாளுகைக்குக் கீழ்ப்படிந்து கிடந்திருக்கிறது. இனியாவது மண்ணின் மைந்தர்களின் ஆட்சியில் ஆப்கானிஸ்தான் அமைதியாக வாழ உலக நாடுகள் அனுமதிக்க வேண்டும்.

தாலிபான்களை அடிப்படைவாதிகள் என்று அனைவருமே விமர்சிக்கிறார்கள். அவர்கள் கடும்போக்காளர்கள்தான். ஆனால் அந்த ஒற்றைச் சொல்லாடல் மூலம் அவர்களுடைய ஒட்டுமொத்தச் செயல்பாடுகளையுமே நிராகரிப்பது முறையல்ல. தாலிபான்கள் ஆயுதப் போர் முறையை கைக் கொண்டவர்கள். அந்நிய சக்திகளுடன் சமரசம் செய்து கொள்ளாதவர்கள். அவர்கள் எந்த வெளிநாட்டவரையும் தங்கள் மண்ணை மேலாளுகை செய்வதை அனுமதிக்கத் தயாரில்லை. ஆப்கானிஸ்தான் ஆப்கானியர்களால்தான் ஆளப்பட வேண்டும்; பிறர் கையாளும் பொம்மையாக இருப்பதை ஏற்க முடியாது என்கிறார்கள். 2001 முதல் தொடர்ந்து போர் நடத்தியிருக்கிறார்கள். அமெரிக்காவையும் அதன் கூட்டாளிப் படைகளையும் விரட்டி இருக்கிறார்கள். உலகளாவிய அளவில் போராடிக் கொண்டிருக்கும் தேசிய இனங்களுக்கு இது ஓர் எழுச்சியைத் தரத்தக்கது. 30 நாடுகளின் கூட்டமைப்பாகிய 'நேட்டோ' படைகளை 75,000 வீரர்களை மட்டுமே கொண்ட தாலிபான்கள் வெளியேற்ற முடியும் என்றால், எந்த ஏகாதிபத்திய வல்லாதிக்கத்தையும் எந்த தேசியஇனமும் எதிர்த்துப் போராட முடியும் என்ற நம்பிக்கையை இது தருகிறது.

கார்டர் மல் கெய்சன் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க நிர்வாகத்தில் பணியாற்றியவர். The American War in Afghanistan : A History என்ற புத்தகத்தை 1 ஜூலை 2021 அன்று வெளியிட்டார். ஆப்கானிஸ்தானில் தாம் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், "போராளிகள் மற்றும் உள்ளூர் கிளர்ச்சியாளர்கள் இராணுவ வலிமையில் பலவீனமானவர்கள். ஆனால், அதிக உந்துதல் மற்றும் உறுதிப்பாடு கொண்டவர்கள். இத்தகையவர்களுடனான போர்கள் அனைத்தையும் அமெரிக்கா இழந்துள்ளது" - என்று ஒரு மதிப்பீட்டைப் பதிவு செய்கிறார். பெங்காசி, சோமாலியா, செய்கோன்



ஆகியவற்றிலிருந்தும் அமெரிக்கா குனிந்த தலையுடன் தான் வெளியேறியது. இவையெல்லாம் பலம் குறைந்த சிறிய நாடுகள்தான். படை வலிமை அமெரிக்காவின் வெற்றியை உத்தரவாதம் செய்ய முடியவில்லை. "உள்ளூர் பண்பாட்டை உயர்த்திப் பிடிக்கும் அர்ப்பணிப்புள்ள எதிரியை அமெரிக்கப் படைகளால் எதிர்கொள்ள இயலவில்லை" என்கிறார். இதில் தன்னுரிமைக்காகவும், தன் தேசிய இன அடையாளத்தை யும், இருப்பையும் பாதுகாக்கவும், படை வலிமையைக் காட்டி மீசையை முறுக்கும் நாட்டாண்மைக்கார பெரியண்ணன் அரசுகளை எதிர்கொள்வதற்கான நடைமுறைத் தத்துவம் ஒளிந்து கொண்டிருக்கிறது. ஒரு தேசிய இனத்தின் இளைஞர் பட்டாளம் அர்ப்பணிப்புடன் களத்தில் இறங்கி விட்டால், எந்த ஆக்கிரமிப்பாளனும் அத்தேசத்தை எதுவும் செய்துவிட முடியாது.

கேட்டால் கொடுக்க மாட்டார்கள்; அதற்காக கேட்காமலேயே இருக்கலாமா? உரிமைகளைக் கோரினால் ஒடுக்குவார்களோ? என்ற அச்சத்தில், கேட்டால் கொடுக்க மாட்டார்கள்; அதனால் இருப்பதை ஏற்றுக்கொள்வோம் என்று கருதும் தலைமைகள் ஒரு தேசிய இனத்தைப் பீடித்த நோய்கள்!

கீழ்மைப்பட்டுக் கிடக்கும் ஒரு தேசியஇனத்தின் உரிமை மீட்புக்காகக் களத்தில் நிற்காமல், இருக்கும் அமைப்புக்குள் கிள்ளிப்போட்ட உரிமைகளை ஏற்றுக் கொண்டு அரசியல் நடத்த முற்படக் கூடிய தலைமைகள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பெருந்தேசிய இன ஒடுக்குமுறைக்குத் துணை போகின்றனர். இத்தகையப் போக்கு பல்வேறு நாடுகளில் நிலவுகிறது. ஒடுக்கப்படும் ஒரு தேசிய இனத்தின் உரிமைகளைக் காக்க களம் இறங்காமல், "இருப்பதை ஏற்போம்" என்ற போக்கைக் கைக்கொண்டு, நடப்பில் இருக்கும் அரசியலுக்குள் தங்களைப் பொருத்திக் கொண்டு, அரசியல் செய்பவர்களைப் பார்த்து, ஆப்கானியர்களும், சோமாலியர்களும் நிச்சயம் சிரிப்பார்கள்! ●

# வாழ்க்கை ஒப்பந்த விழா



## பெ.திலீபன் பிரபாகரன்-ப.கார்குழலி



மா.பெ.பொ.க. செயல்வீரரும் பேரறிவாளன் கல்வி பாசறை நிறுவனருமான தோழர் பூ.கா. பொன்னப்பன் - அஞ்சலி இணையரின் மகன் பொ. திலீபன் பிரபாகரன்; காரைக்கால் வி. பக்கிரி இணையரின் மகள் ப. கார்குழலி ஆகியோரின் இல்வாழ்க்கை இணை ஏற்பு நிகழ்ச்சி 27.8.2021 அன்று காலை 6 மணியளவில் ஸ்ரீ அய்யப்ப ஜெயலட்சுமி நாராயண குரு பூஜா மண்டபத்தில் (ஆள்வார் பங்களா எதிரில்) ஓதுவரர் திரு. த. தமிழ்செல்வன் அவர்களால் தமிழ் முறைப்படி இனிதே நடைபெற்றது.

**திருமண நிகழ்வில் பங்குபெற்றோர் :**

தாம்பரம் ஆனை. பன்னீர்செல்வம், தாம்பரம் சுப்பிரமணி, சி. நடராசன், மு. ஜெயப்பிரகாஷ், தீ. கோபாலகிருஷ்ணன், திருக்குறள் பேரவை குறள் அமிழ்தன், சம்பந்த சிவகுமார், கீழம்பி மு. சந்திரமோகன், கீழம்பி வ. வேதகிரி, கீழம்பி பழனி, இரா. நாராயணமூர்த்தி, மா. கோதண்டபாணி, இரா. ஆதிகேசவன், இரா.ராஜசேகர், மாறன் கு.ராஜா, சி.வி.எம்.அ. சேகர்-தி.மு.க., நாத்திகம் நாகராஜன்-தி.மு.க., வில்லவன்-தி.மு.க., ஜனதா சம்பத், வளையாபதி-அ.தி.மு.க., வி.ஆர். மணிவண்ணன், த. முகிலன், த. தமிழினியன், தா. வெற்றி தமிழன், செந்தமிழ்க்குமரன், தமிழரசன், திராவிடர் விடுதலை கழகம் ரவிபாரதி, ஏழுமலை, ராமஜெயம், பிரகாஷ், ஏழுமலை, டி. கோவிந்தசாமி, B. பன்னீர் செல்வம், சி.எல். ஆனந்தன் மற்றும் 28.08.2021-இல் பேரறிவாளன் தாயார் அற்புதம்மாள், டேவிட் பெரியார், பால் சுதர்சனம் இல்லத் திற்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்தனர். மற்றும் சுற்றத் தார் முற்போக்கு அமைப்பு தோழர்கள் தாண்டவமூர்த்தி, பழனி மு. மேகநாதன் வாழ்த்து தெரிவித்தனர்.

*மந்திரிகளுக்குத்தான் என்ன மதிப்பு இருக்கிறது? வடநாட்டான் சொல்வதுபோல் வாலையாட்டும் பரிதாப நிலைதானே இவர்களுக்கு? இவர்கள் பதவிகளை யார் மதிக்கிறார்கள்? இவர்கள் மனசாட்சியே இவர்கள் பதவியை மதிக்க முடியாதே!*

**- தந்தை பெரியார்**



## தமிழ்நாட்டு முதலமைச்சர்
## மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு

தந்தை பெரியார் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாகக் கொண்டாப்படும் என அறிவித்ததையும் ஆதிச்சநல்லூர், கொற்கை பகுதிகள் அடங்கிய பொருநை ஆற்றங்கரை நாகரிகம் என தமிழர் நாகரிகத் தொன்மையை அறிவித்ததையும் வரவேற்று மாண்புமிகு தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை மனமார பாராட்டுகிறோம்.

*- ஆசிரியர் குழு*

## வாழ்க்கை ஒப்பந்த விழா

### வ.அரிராசு-சே.நிவேதா



திருவண்ணாமலை மாவட்டம், சிறுநாத்தூர், மேட்டூர் வ. பரசுராமன்-அம்மாக்கண்ணு அவர்களின் மகன்வழிப் பெயரனும், சீனிவாசன்-யசோதா அவர்களின் மகள்வழிப் பெயரனும் சென்னை மேற்குத் தாம்பரம் ப. வடிவேலு - வ. சுகுணா இணையரின் மகனுமாகிய மரு. வ. அரிராசுவுக்கும்; வேலூர் மாவட்டம், குப்பத்தா மோட்டூர் முருகன்-மு. வெள்ளையம்மாள் அவர்களின் மகன்வழிப் பெயர்த்தியும் மு. சிவலிங்கம்-வ. கலாராணி அவர்களின் மகள்வழிப் பெயர்த்தியும் இராணிப்பேட்டை மாவட்டம், வாலாசா ஒன்றியம், சீகராசபுரம் மு. சேட்டு-ஜெயபாரதி இணையரின் மகளுமாகிய மரு. சே. நிவேதாவுக்கும் திருமண விழா 16.6.2021, புதன்கிழமை, காலை 6 மணிக்கு இராணிப்பேட்டை தொழிற்பேட்டையில் உள்ள GEEKAY MILLENNIAA அரங்கில் சிறப்புடன் நடைபெற்றது. மணமகனின் தந்தை ப. வடிவேல் சிந்தனையாளன் முன்னாள் பொறுப்பாளர் ஆவார். மணமக்களை சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் வாழ்த்துகிறோம்.

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி - செப்டம்பர்-2021

| | | |
|---|---|---|
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **மதனகவி** | வாணியம்பாடி | 500/- |
| **சோ.அண்ணாதுரை** | பெங்களூரு | 500/- |
| **இரா.பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி | வாலாசாபேட்டை | 200/- |
| **வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| **திருமதி. சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - செப்டம்பர்-2021

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வாலாசா வல்லவன்,**
மனை எண்.277/2, சென்னை-திருவள்ளூர் நெடுஞ்சாலை, அம்பத்தூர், சென்னை - 600 050.
அச்சிட்டோர் : **ஸ்ரீ மூகாம்பிகை ஹை-டெக் பிரிண்ட்ஸ்,** எண்.24, ஆயில் மாங்கர் தெரு (வாணியர் தெரு)
(ஜாம் பஜார் மார்கெட் எதிரில்) திருவல்லிக்கேணி, சென்னை - 600 005. பேசி : 044-28484457

Printed by **SREE MUGAMBIKAI HI-TECH PRINTS** No.24, Oil Monger Street (Vaniyar Street), Opp. Zam Bazaar Market, Triplicane, Chennai - 600 005. Ph : 044-28484457 and Published by V. Anaimuthu on behalf of Marxist Periyarist Communist Party, No.277/2, Chennai-Tiruvallur High Road, Ambattur, Chennai-50. Editor : **VALASA VALLAVAN**